திராவிடநாடு

22—4—62 | வார வெளியீடு | விலை 16 காசு

எச்சரிக்கை

—(சகரன்)—

★

சீரிய கருத்து வெளிப்படும்
வீரிய உணர்வு ஏற்படும்
சிறைகள் ஓர்நாள் உடைபடும்
சிங்கம் பற்பல புறப்படும்.

அடிமை மோகம் மிதிபடும்
மடமை செய்கை பொடிபடும்
கடமை வந்து கூப்பிடும்
காளையர் விழிப்பு ஏற்படும்.

உதிரிப் படைகள் தூளாகும்
எதிரில் இருப்பது வாளாகும்
பரிதி எழுந்தால் ஒளியாகும்
பதறி எழுந்தால் புலியாகும்.

ஆண்டது போதும் போவீர்கள்
மாண்டது போதும் உணர்வீர்கள்
நீண்டது இந்த நீட்டோலை
நீளவும் வேணுமா சாவோலை.



துடித்த நா படைத்தேரைத் தட்டியடக்கிய பனைத்தார் வேந்தனும் வஞ்சிநாட்டு சேரனுடைய பரம்பரைக்கும், மங்காத் தமிழர்தம் பெருமையைச் சிங்களச்சீமையிலும் நிலைநாட்டிய திங்களொத்த மார்பன் கரிகாலனின் சோழப் பரம்பரைக்கும் நண்பனாய்—நல்லணையாய் விளங்கியவன்; நிலை உயரக் கலை வளர்த்தவன்; முடிநிறை படினன்; மூவேந்தர்களிலொருவன்; பாண்டியன்.

அனைத்திலும்பாண்டித்தியமுடையவனல்லவா பாண்டியன்! வீரம் பொங்குமவன் தோற்றமோ சிங்கம்! போரிலே அவன் புலி! அவன் பெயர் கேட்டாலே பகைவர் கொண்டிடுவர் கிலி. இடி இடிக்கும் முன்பு எழுகின்ற மின்னலைக் கண்டே புற்றுக்குள் ஓடி ஒளியும் "அருமணிப் பைந்தலை ஆடரவ"மதைப் போன்று, வெஞ்சமர்க் களத்திலே அவன் வேலேந்தி நின்றாலே பகைவர்கள் மருண்டு, வெருண்டோடி ஒளிவர்! அத்தகைய ஆற்றல்மிகு வேந்தன் பாண்டியன், தன் செங்கோல் கொடுங்கோலானது; நீதி பிறழ்ந்தது—என்பதையறிந்தவுடன் "யானோ அரசன்? யானே கள்வன்; மன்பதை காக்கும் தென்புலம் காவல் என் முதல் பிழைத்தது; கெடுக என் ஆயுள்!" என்று உயிர் விட்டநெறியாளன் நெடுஞ்செழியன் வழியோனும்—அப்பாண்டியனது நாட்டு வளமோ சொல்லுந்தரமன்று!

கூடல் பெருநகரத்தின் வீதி. அவ்வீதியிலே வருவோர் தடுமாறாமல், அல்லது விழுந்தெழாமல் போக முடியாது. காரணம் அந்த வீதி முழுமையும் ஒரே சேறு. அங்கே அந்த சேறுககளம் எப்படி உணடானது? சேறுக இருந்தும் மனத்தைக் கிளறும் மணம் வீசுகின்ற விந்தையென்ன?

இதுதான்; அது சேறல்ல; சந்தனம்! "மைந்தரோ(டு) ஊடி மகளிர் திமிர்ந்திட்ட குங்கும ஈர்ஞ்சாந்தின் சேறு" விழைந்தேற்றவனோடு கூடி மகிழ்ந்த கோதையர் குழாம் கொட்டிய சந்தனம்தான் சாரளத்தின் வழியாக வீழ்ந்து வீதியெல்லாம் சேறுகவும், மணக்கவும் காரணம்.

இத்தகைய பல்வீதிகளையுடைய அப்பாண்டியப் பெருநாட்டில் நிலவியது, ஓரேவகை நெறி; இருகுலம்; மூவகை மூத்தமிழ்; நான்குவகை நிலம்; அத்துடன் பாலையும்இணைந்த ஐவகைத்திணை.

பசும்பொன், சாம்பூநதம், ஆடகம் ஆகிய மூவகைப் பொன்னினும் மேம்பட்ட வகையாம் செம்பொன் கோடுபோல் ஓடிப் பரவிக்கிடக்கும் நாடு.

ஆழ்கடல்; அதன் கருவில் விளையும் சங்கும், முத்தும் அளவிடற்கரிது!

புன்னை மரத்தின் பூக்களைப் பார்த்துக்கொண்டு, வேங்கை மரத்துப் பூக்களுடன் விருப்புடன் விளையாடி, ஆம்பல் மலர்களுடன் அளவளாவி, நீலோற்பல மலர்களுடன் நின்று குலவி, இடையிடையே எத்தனையோ மலர்களுடன் கூடி, தடாகத்துத் தாமரையையும் தழுவிவரும் தென்றல் காற்று தவழும் மலைச்சாரலில் — அடவியில், ஆர்ப்பரித்துப் பிளிறித்திரியும் களிறுகளுக்கோ கணக்கில்லை! தந்தத்திற்கும் குறைவில்லை.

தங்கம், தந்தம், சங்கு, முத்து—இத்தனைக்கும் மேலான முத்தமிழ்க் காவியங்களோ எண்ணிலடங்கா! ஏற்றம் நிறைந்தது.

இந்நிலை முழுமைக்கும் முழுக் காரணனாய்—உரிமையாளனாய் விளங்கும் பாண்டியனுக்குப் பகை வருமிலர். பகைகொண்டு, பாய்ந்து வரும் ஈட்டிக்கு இரையாகி மாய்ந்து, மண்மீது சாய்ந்து வீழ எவர்க்குத் தான் எண்ணமெழும்?

முன்னவன்; தென்னவன்; நம்மவனும் அப்பாண்டியனின் பழுதிலா வீரத்தை; நாட்டு வளத்தை முத்துத் தமிழ் முழக்கும் முத்தொள்ளாயிரம் பாருக்குப் பறைசாற்றும் வரிகள் இது:

"பார்படுப செம்பொன் பதிபடுப முத்தமிழ்நூல்
நீர்படுப வெண்சங்கும் நித்திலமும்-சாரல்
மலைபடுப யானை வயமாறன் கூர்வேல்
தலைபடுப தார்வேந்தர் மார்பு,"

இப்படி சீரோடும், சிறப்போடும், வளங்கள் பலபெற்றும், வெல்வாரும் மிக்காருமின்றி வாழ்ந்தோம்! அன்று. வளமார் இத்திருவிடத்தில் அன்றிருந்த இயற்கை வளங்கள் இன்றில்லையா? உண்டு; அன்றிருந்ததைவிட மேலும் கூடுதலாகவே உண்டு. ஆயின், வறுமையும், வாட்டமும் நாட்டிலே நர்த்தனமாடுவது ஏன்?

தூத்துக்குடி முத்து; சேலத்து இரும்பு; கழனிகளைக் களஞ்சியங்களாக்கும் காவிரியின் கரையிலே எண்ணெய் ஊற்றுக்கள். மைசூர்க் காடுகளில் யானை, சந்தனம், தேக்கு; கோலாரின் வயல்களில் தங்கம்; கேரளத்தின் கருவில் மிளகு, ஏலம், கிராம்பு. ஆந்திரத்தின் மடியில் தவழ்ந்தோடும் அருஞ்செல்வங்களாம் கிருஷ்ணா, கோதாவரி நதிகள்; இன்னபிற...எத்தனை எத்தனையோ! இப்படி இயற்கை வளமெல்லாம் இருந்தும் இன்ப வாழ்வு இல்லையே ஏன்?

வென்று வாழ்ந்த திராவிடன், தேம்பி நின்றழுவது ஏன்?

அடிமைநிலை!! இது அகன்றிட வேண்டாமா?

✱

பயமா? பொறுமையா?

மலர் 20 | ஆண்டு சந்தா ரூ. 8 (22—4—62) தனிப்பிரதி 1[illegible] காசு | இதழ் 34

"பயந்து வாழ்வதற்கா சுதந்தரம் பெற்றோம்?"

என்று தமிழக முதலமைச்சர் திடீரென்று ஒரு கேள்வியைப் போட்டிருக்கிறார்.

கேள்வி என்னவோ கேட்கவேண்டிய கேள்வி—கேட்கப்படவேண்டிய கேள்விதான்.

ஆனால், யார் இந்தக் கேள்வியைக் கேட்பது? யாரைப் பார்த்து இந்தக் கேள்வியைக் கேட்பது என் பதிலேதான் நமக்கும் திரு. காமராசர் அவர்களுக்கும் சிறிது வேறுபாடு ஏற்படுகிறது. நமக்கும் முதலமைச்சருக்கும் என்று சொல்வதைவிட, நாட்டு மக்களுக்கும் முதல்வருக்கும் என்று சொல்வதுதான் அந்தக் கேள்வியை மற்றவர்கள் புரிந்துகொள்ள வாய்ப்பளிப்பதாக அமையும் என்று கருதுகிறோம்.

ஏனென்றால், பயந்து வாழவேண்டியவர்கள் யார்? பயங்காட்டி வாழ்பவர்கள் யார் என்ற உண்மையை நமது முதலமைச்சர் புரிந்துகொண்டிருப்பார் என்றுதான் நாம் எண்ணுகிறோம்.

"அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதொரு போதுமில்லை"

என்று அன்று பாரதியார் கூறிப் போந்தார்.

"அஞ்சி அஞ்சிச் சாவதா? அடிமை வாழ்வு வாழ்வதா?"

என்று கேட்கும் நிலையிலுள்ள இந்நாட்டுப் பெருங்குடி மக்களைப் பார்த்து,

பயந்து வாழ்வதற்கா சுதந்தரம் பெற்றோம்

என்று பயந்து வாழும் நிலையினைக் கடந்து நிற்கும் ஒருவர் கேட்கிறார் என்றால், அந்தக் கேள்வியில் பொதிந்து கிடக்கும் உண்மைகளை உணரமுடியாத அப்பாவிகள்தான் இந்த நாட்டில் இருக்கிறார்கள் என்று பொருள் கொள்வதா, அல்லது பதவியின் முதற்படியில் நிற்பவர் எதைக் கூறினாலும் அதை மக்கள் கண்ணை மூடிக்கொண்டு கேட்டுக்கொள்வார்கள் என்று பொருள் கொள்வதா?

ஒரு பொறுப்பில் இருக்கும் அமைச்சர் இப்படி எல்லாம் பேசுவதைக் காண நமக்கு வெட்கம் ஏடுபடுவதைவிட, வேதனைதான் அதிகமாக உண்டாகிறது.

காரணம், அவர் தி. மு. க. வினரை மனதில் வைத்துக்கொண்டுதான் இந்தத் தேர்தலில் இருந்து பேசி வருகிறார்.

தேர்தலில் தி. மு. க. பெற்ற வெற்றி அவருக்குப் பேரச்சத்தை உண்டாக்கிவிட்டிருக்கிறதாக அவருடைய பேச்சுக்கள் சிறிது நாட்களாக அமைவதை நாம் பார்த்து வருகிறோம்.

தி. மு. க-வை ஒழித்துக்கட்டுவதுதான் எனது முதல் வேலையும் முக்கியமான வேலையும் என்ற போக்கில் பேசிவருகிறார்.

காலையில் எழுந்ததும் நாளிதழ்கள் எதைப்புரட்டிப் பார்த்தாலும், அவற்றில் எங்காவது ஓரிடத்தில் முதலமைச்சரின் பேச்சுப் போடப்பட்டிருக்கும். என்ன பேசியிருக்கிறார் என்று பார்த்தால், திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றித்தான் பேசியிருக்கிறார் என்பது தெரியும்.

அந்தப் பேச்சு, அரசியல் மேடையிலானாலும் சரி, அறிவியல் மன்றத்திலானாலும்சரி, அங்காடிக்கடையிலானாலும் சரி,

"திராவிட முன்னேற்றக் கழகத்தை
ஒருகை பார்த்துவிட்டுத்தான் மறுவேலை"

என்று அமைந்திருக்கும் அமைச்சரின் பேச்சு.

ஏனிந்தநிலை அவருக்கேற்பட்டதென்பதை யெண்ணிப் பார்க்கும்போதுதான் அவருடைய உண்மை வடிவம், புகைப்படம் எடுத்ததுமாதிரி, பளிச்சென்று தெரிகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தைக்கண்டு அவர் அஞ்சுகிறார், திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சி அவருடைய பதவியைப் பறித்துக்கொள்ளுமோ என்று அவர் பயப்படுகிறார் என்பது புலனாகிறது.

ஆனால், இந்த அச்சம் அவருக்கு ஏற்படத்தேவையில்லை. அச்சத்திற்கு மாறாக ஆனந்தமே உண்டாகக் கூடிய ஒரு நிலைமையைக்கண்டு அவர் அச்சப்படுகிறார் என்றால், அது, அவரது அழுக்காறுகொண்ட உள்ளத்தை எடுத்துக்காட்டுகிறது என்றுதான் பொருள் கொள்ளவேண்டும்.

ஏனென்றால், நாட்டிலுள்ள ஒரு கட்சியின் வளர்ச்சி, ஆளுங்கட்சியாக அமைந்திருக்கும் கட்சிக்கு எதிர்க்கட்சியாக அமையும் வாய்ப்பைப் பெறுகிறது. அப்படிப் பெறும்போது, ஆளுங்கட்சி செய்யும் தவறுகளை எடுத்துக்காட்டித் திருத்தும் நிலை உண்டாகிறது. அப்படி உண்டாகும் நிலை, ஆளுங்கட்சிக்கு நல்லதே தவிரக், கெடுதல் இல்லை.

என்றாலும், ஏனோ காமராசர் அவர்களுக்குக் கன பயம் உண்டாகிறது?

பயந்து வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் நம்மைப் பார்த்துப், பயமற்று வாழும் நிலையைப் பெற்றுள்ள ஒருவர் பயந்து வாழவேண்டியிருக்கிறதே! இதற்கா சுதந்தரம் பெற்றோம் என்று ஆயாசப்படுகிறார் என்றால், அவருடைய அச்சம் எதனை அடிப்படையாக வைத்து எழுந்துள்ளதென்பது புரிகிறதல்லவா?

எங்கே தமது பதவிக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று அவர் அஞ்சுகிறார்.

திராவிட முன்னேற்றக் கழகம் மேலும் மேலும் வளர்ந்துகொண்டே போகுமானால், ஆளுங்கட்சியாக மாறிவிடுமோ என்று அவர் அஞ்சுகிறார்.

அஞ்சாதரசோச்சுபவருக்கு நமது வளர்ச்சி அச்சத்தை உண்டாக்கிவிட்டிருக்கிறது.

தமது ஏகபோக உரிமைக்கு முடிவு கட்டிவிடுவார்களோ இந்தத் தி. மு. க.வினர் என்ற ஏக்கம் அவரைப் பிடித்தாட்டத் தொடங்கியிருக்கிறது.

எனவே, எங்கு சென்றாலும், எதுபற்றிப் பேசினாலும் தி. மு. க. மீது ஏதாவதொரு குற்றச்சாட்டைப் போடலாமா என்ற முறையில் பேசி வருகிறார். தாம் இப்படிவிடாது பேசிவந்தால், தி. மு. க.வின்பால் மக்கள் வைத்திருக்கும் பற்றும் பாசமும் குறைந்துவிடாதா என்ற குறுகிய எண்ணம் இவரிடம் குடிகொண்டுவிட்டது.

இந்த அவசியமற்ற எண்ணம் ஒரு பொறுப்பில் இருக்கும் முதலமைச்சருக்கு ஏற்படக்கூடாது. அதிலும் ஒரு எதிர்க்கட்சியின் வளர்ச்சி கண்டு அஞ்சுவதோ பொறாமைப்படுவதோ ஆகாது.

எனவே, நமது முதலமைச்சருக்கு இப்போது ஏற்பட்டுள்ளது பயமா? அல்லது பொறாமையா?

பயம் என்றால், பயப்படத் தேவையில்லை.

பொறாமையென்றால், அது, அவரது உள்ளத்தில் குடிபுகாது தடுத்தாக வேண்டும். இந்த பெரிய பொறுப்பை அவர் நிச்சயம் ஏற்று நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று பெரிதும் விரும்புகிறோம்.

"கண்ணும் நாணமும்"

[நெடுமாறன்]

முன்னிரவு!

பால் போன்ற வெண்ணிலவில் நிலவுப் பயன்கொள்ளும் நெடுமுற்றத்து மேடையொன்றில், சேல் போன்ற விழிகளை இமைக் கதவுகள் மூடப் படுத்துக்கிடந்தாள் அவள். கோல்கொண்டு தன்னை அலைக்கழிக்கும் அன்னையும் உண்டென்பதனை மறந்து, கனவுலகில் பொழுதோடும், நாளோடும் நினைவில்கொண்ட செம்பியனின் முத்தார மார்பினிலே, முழு நிலவு முகத்தாள் சாய்ந்துகிடந்தாள்—அவனோ,

பாராளும் மன்னன்-கார்போன்று வழங்குவதில் வள்ளல்—தேரோடும் புகாரின் தலைவன்—போராடும் களத்தில் அவனோர் மறவன்—பகைவர்க்குக் காலன்! அவனுடைய,

குன்றெடுக்கும் பருவயிரத்தோள்களிலே பூங்கொடியவள் தொத்திக் கிடந்தாள் — தொத்திய தலைவிதனை வாரியெடுத்து அணைத்திட்டான், கன்னித் தமிழ் மகனும்!

களம்கண்ட காளைக்குக் கன்னியவள் அதரங்கள் இரத்தவெள்ளத்தின் நினைவைத் தருவதில் என்ன தவறு? இதழமுதம் பருகக் குனிந்தான்.

''பாழும் கண்களுக்கென்ன கேடு. விழிக்கதவை யார் திறந்தார்?'' என்று பதறினாள் அவள். கனவா இது?

''முத்தென ஒளிவீசும் முழுநிலா மேலே சுத்தான இன்பம் பெறுவதற்குள் சதி செய்தனவே இக்கண்கள். இவை கண்களல்லடி — புண்கள்! மீண்டும் எத்திறத்துக் காண்பேன் என் தலைவனை'' என்று நெட்டுயிர்த்தாள் நங்கையும்.

மறுநாள்—

காரிகையவள் கனவில் வந்து கலக்கத்தை உண்டுபண்ணிய கிள்ளியவனும் உலா வருகின்றான்.

சாளரத்தோரம் வந்துநின்று செக்பியனின் பேரழகைக்கண்டுஇன்புறம் காத்துநின்றாள் அவளும். தூரத்தில் குதிரைமீது சோழன் வருவதைக் காண்கின்றாள்—

''மாறனின் வடிவும் இதுதான், மயக்கமே வேண்டாம் நெஞ்சே! சேரனின் உறவைப் பெற்றான் இவனும், நானும் சேர்ந்திடத் தடையே இல்லை—பாரினில் இவனே தலைவன்'' என்று மனத்துள் பிதற்றிக் கொண்டிருந்தாள்.

சாளரத்தருகே குதிரை வருகிறது. அரிமாபோல் கம்பீரமுடன் அமர்ந்திருந்த மன்னன் கண்களும், மங்கையிவளைக் காணுகின்றன. அக்கண்களிலேதான் என்னே ஆற்றல்! அவன் நோக்கிற் கெதிர்நோக்குப் போட நினைத்தாள் அவளும். ஆனால் வழிவழியே வந்த நாணமென்ற பண்பு, கோல் கொண்டு அவன் அன்னையைப்போல் அடித்ததா? நாணத்தால் தலை கவிழ்ந்தாள் நங்கை!—ஒருகணம்.

மீண்டும் பார்க்கையில் — அங்கு சோழன்—அவள் மனத்தோழன்—இல்லை, சென்றுவிட்டான்!

வெறுப்பினில் உளம் சோர்ந்து நெருப்பினில் இட்ட மென்மலரானாள் மங்கை.

''கனவினுள் வந்து என்னைத் தழுவி மகிழ்ந்தான் என் தலைவன். அவன் அருளினைப் பெறுவதற்குள் இந்தப் பாழும் கண்கள் விழித்துக் கொண்டனவே? அதுதான் போகட்டும்—இந்த நனவுலகிலாவது என் உளங்கவர்ந்தானின் அருள் பொழியும் முகத்தைக் காணவந்து நின்றால், இந்த நாணம் என்னை அப்போதுதான் வந்து தடுப்பதா? இந்த நாணத்தாலல்லவா தலை குனிந்தேன். கத்தும் கடலைக் கிழித்தோடும் வாணிப நாவாய்கள், இந்தச் சோழனின் ஆட்சியில் அக்கிரமமே நடக்கவில்லை. நீதி வழுவா ஆட்சி இங்கு எவரையும் எவரும் துன்புறுத்தவில்லை என்பதைப் பறைசாற்றி ஓடுகின்றனவாமே! இந்த கண்களும் நாணமும் என்னைத் துன்புறுத்தி ஏமாற்றுகின்றதே, இதை இந்த மன்னர் கவனித்தாரா? இவைகள் இந்த ஆட்சியின் நீதிமுறைக்குத் தப்பியல்லவா நடக்கின்றன. இவற்றை எவர் கண்டிப்பார்?'!

தனக்குள் அவள் கேட்டுக்கொண்டாள். அந்த காட்சி இது:

''கனவினுள்க் காண் கொடா
கண்ணும், கலந்த
நனவினுள் முன்விலக்கும்
நாணும்: இன வங்கம்
பொங்கோதம் போழும்
புகா அர்ப் பெருமானார்
செங்கோல் வடுப்படுப்பச்
சென்று''

முகவரி மாற்றம்

அரங்கண்ணல்,

9A, டாக்டர் சி.பி. இராமசாமிரோடு,

அபிராமபுரம், சென்னை-18.

விடுதலைக்கு ஓர் கடுங்கோன்

— [ப. கண்ணன்] —

[கி. பி. 575 முதல் 600 வரை நாடாண்ட பாண்டியன் கடுங்கோன் நடத்திய விடுதலைப் போரை விளக்கும் சிறு நாடகம்.]

காட்சி - 1

இடம்:- செந்தன்வழுதி இல்லம்

காலம்:- முற்பகல்

[ஏட்டுச் சுவடி படித்துக்கொண்டிருக்கிறான் இளைஞன் கடுங்கோன். பூத்தொடுத்துக் கொண்டிருக்கிறாள் தேவி ஐயனடியாள்.]

கடுங்:- (ஆவலோடு) அக்கா! அக்கா!... பார்த்தாயா இந்த அற்புதத்தை?

ஐயன:- எதையடா தம்பி! எதை அற்புதமென்கிறாய்?

கடுங்:- இந்தப் பைந்தமிழ்ப் புறநானூற்றுச் செய்யுள் என்னைப் புது மனிதனாகவே ஆக்கிவிடும் போலிருக்கிறது அக்கா! புலவர் மோசிகீரனார் பாடுகிறார், கேள்:

"நெல்லும் உயிரன்றே,
நீரும்உயிரன்றே,
மன்னன் உயிர்த்தே
மலர்தலை உலகம்
அதனால், யான் உயிர்
என்பது அறிகை
வேல்மிகு தானை வேந்தற்குக் கடனே!"

மனிதனின் உயிர்வாழ்வுக்கு மிகத் தேவையானவை குடிக்கின்ற நீரும், உண்ணுகின்ற நெல்லுமாகும். ஆகவே, நெல்லும் நீருமே நமக்கு உயிரென்று கருதுகிறோம். அது தவறு என்கிறார் புலவர். வேந்தன் தான் உயிராம்; வேந்தனது காவல் முறைதான் உலகையே காப்பது என்கிறார். ஆதலாலே வேற்படை மிகுந்த வேந்தனே உலக நல் வாழ்வின் உயிர்ப்பாக விளங்க வேண்டுபவன் என்கிறார். எவ்வளவு அழகான உண்மை! எவ்வளவு அழகான உவமானம்!

ஐயன:- தம்பி! பழமையிலே புதுமை கண்டு, இப்படிப் புத்துணர்ச்சி பெறுவதறிய, நான் பூரித்து மகிழ்கிறேன். எனது எண்ணம் ஈடேறுமென்று நான் திண்ணமாக நம்புகிறேனடா தம்பி!

கடுங்:- என்ன அக்கா உனது எண்ணம்? நானறியலாமா?

ஐயன:- அறிவது மட்டுமன்று; அதனை நிறைவேற்றுபவனும் நீதான்! "மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" என்ற மெய்யறிந்து, நெறி பிறழாது நாடாண்ட பாண்டியர்கள் நமது முன்னோர்கள்! செங்கோல் பிடித்த சிங்கத் தமிழ்க்குடியில் பிறந்த நாம் சீரழிந்து பங்கமுற்றுக் கிடக்கின்றோம்! நெல்லும் நீருமே உயிரென்று கருதி இழிசொல்லுக்கு இடமளித்து, சோற்றுப் பிண்டங்களாகிச் சொரணையற்றுப்போய் விட்டோம்! இந்நிலையை மாற்ற வேண்டுமடா தம்பி, மாற்றவேண்டும்!

கடுங்:- அக்கா! என் உள்ளத்தே கிடக்கின்ற உரிமை நெருப்பைத்தழலாக மாற்றுகின்றாய்! மிகு விளக்கம் தேவையில்லை; நான் என்ன செய்யவேண்டும்? சொல்!

ஐயன:- புலவர் மோசிகீரனார் புகன்றுள்ளபடி "வேல் மிகு தானை வேந்தனின் கடனை" ஏற்கவேண்டும் நீ! பாண்டிய மண்டலத்தின் மணிமுடி மன்னனாகிப் பழங்குடியின் மானத்தைக் காக்கவேண்டும். வேற்று மொழியும், சமயமும் ஆட்சி முறையிலே புகுத்தி; தமிழ், தமிழ்க் கலை, இலக்கியம், பண்பாடுகளை அழித்து வேதனையரசு புரிகின்ற களப்பிர வெறியர்களை விரட்ட வேண்டும் நாட்டைவிட்டு!

கடுங்:- என்னையறிந்தவன் நான்! பிளவோய வினைகள் எது நேரினும்

உறுப்பினர்:

கடுங்கோன்	— பாண்டியன்
கண்டகதேவன்	— களப்பிர மன்னன்
சேந்தன்வழுதி	— தளவாய்
சிவமாறன்	— கொல்லன்
காளிங்கன்	— தளவாய்
பூபாலி	— இளவரசி
ஐயனடியாள்	— கடுங்கோன் தமக்கை
வைகை	— பூபாலியின் தோழி

மற்றும்

குடிமகன் ஒருவன், வீரர்கள்

காலம்: கி. பி. 575 முதல் 600

இடம்: கொற்கை, மதுரை.

கவலையில்லை, அடிமை நிலையழித்து ஆட்சியுரிமை பெறுவதற்குப் போராடுவேன்! இது மெய்ம்மை! ஆனால்....அக்கா!....

ஐயன:- என்ன தயக்கம்?

கடுங்:- என் மதிப்புக்குரிய மைத்துனர், களப்பிரவேந்தன் கண்டகதேவனின் தளவாய்களில் ஒருவராயிற்றே! குடும்பத்தினுள் குழப்பம் நேர்ந்தால்?

ஐயன:- கவலைப்படாதே தம்பி! குடும்ப வாழ்வைக் காட்டினும், நாட்டின் விடுதலைப் பணி மிகப் பெரிது. பெரியபொதுநலத்திற்குச் சிறிய தியாகங்களையுமா செய்ய முடியாது?

கடுங்:- தமக்கையே! சிறிய பொதுநலத்திற்குப் பெரிய தியாகம் செய்யவும் நான் தயார்! முதலில் மதுரை செல்லவேண்டும் நான். நண்பர்களைச் சந்திக்க வேண்டும். அரண்மனையைப் பார்க்கவேண்டும். ஆட்சி நிலை அறியவேண்டும். அழைத்துச் செல்வாரோ மைத்துனர்?

ஐயன:- வரட்டும். நான் கூறுகிறேன்!

கடுங்:- அதோ, வருகிறாரே!

[தாளவாய் சேந்தன்வழுதி வருகிறான். கையிலிருந்த பெட்டகத்தை அலட்சியமாக வைக்கிறான்.]

ஐயன:- வாருங்கள்! வாருங்கள்! துறைமுகத்து வேலை இவ்வளவு விரைவில் முடிந்துவிட்டதா?

சேந்:- எங்கே முடிந்துவிட்டது? உலகப் புகழ்பெற்றவை நமது கொற்கை முத்துக்கள்! தரத்தில் குறைந்துவிட்டன; குறையுங்கள் விலையை என்கிறான் யவனத்து வணிகன்; இல்லையெனில் சங்கு வளையற் பொதியை விலையின்றிப் போட்டுக் கொடு என்கிறான். கொடுக்க மறுக்கின்றனர் நமது வணிகர்கள். இதனால் சரக்கேற்றிய கப்பல் துறைமுகம் விட்டு நகராமல் நிற்கிறது!

ஐயன:- ஆமாம்! தளவாயாக இருந்த நீங்கள், கப்பல் அதிகாரியாக எப்பொழுது மாறினீர்கள்?

சேந்:- ஐயனடியாள்! அதையேன் கேட்கிறாய்? இந்தக் கண்டதேவன் ஆட்சியிலே கடமையென்பது ஒன்றல்ல; எந்த அதிகாரியும் எல்லா வேலைகளையும் செய்ய வேண்டியுளது. இப்பொழுது இந்த முத்துக்களை மதுரைக்குக் கொண்டுபோய் மன்னனிடம் காண்பித்து வழக்கின் சிக்கலறுக்க வேண்டும்!

ஐயன:- நாதா! தம்பி கடுங்கோன் மதுரை அரண்மனையைப் பார்த்ததில்லையாம்! விரும்புகிறான் அழைத்துப் போகிறீர்களா?

சேந்:- ஓ! வரட்டுமே! அரண்மனையைப் பார்க்கட்டும், அரசரையும் பார்க்கட்டும். அரசியற் பணி வேண்டுமாயினும் வாங்கிக் கொடுக்கிறேன், புரியட்டும்!

கடுங்:- மிக்க நன்றி அத்தான்! முதலில் தமக்கைகொடுத்த பணியை நிறைவேற்றிவிட்டுப், பிறகு அத்தான் கொடுக்கும் அரும்பணி ஏற்றுக்கொள்கிறேன்.

சேந்:- ஐயனடியாள்! என்ன பணி கொடுத்திருக்கிறாய் உன் தம்பிக்கு?

ஐயன:- நமது மொழியும், பண்பாடும் வாழுகின்ற வாய்ப்பை வளர்க்கச் சொன்னேன்; வேறொன்றுமில்லை.

சேந்:- அதுதானே கேட்டேன்! அடங்கி மடங்கிதொழில்செய்து நல்வாழ்வு பெறுகின்ற வாய்ப்பளித்துவிட்டாயோ, என்று பயந்துபோய் விட்டேன்!

கடுங்:- பயப்படாதீர்கள் அத்தான்! நாளடைவில் அந்தத் திறமையை உங்களிடமிருந்தே நான் கற்றுக் கொள்வேன்!

சேந்:- (பெட்டகத்தை எடுத்துக் கொண்டு) பலே! கடுங்கோன்! கெட்டிக்காரன் நீ! தமக்கையின் பேச்சைக் கேட்காதே! தடுமாறிப் போவாய்! வாழ்வதற்கு வழிகாட்டுபவன் நான்தான்! மறக்காதே!

கடுங்:- மறக்கவே மாட்டேன் அத்தான்!

[போகிறான் சேந்தன்வழுதி]

O

காட்சி - 2

இடம்:- மதுரைமாநகரத் தெரு

காலம்:- முற்பகல்

[நண்பன் சிவமாறனோடு கடுங்கோன் பாடிச்சென்றான்.]

செந்தமிழ்த்தாயே! சிறப்புறுவாயோ?
சேர்த்தபுகழெலாம் சிந்திடுவாயோ?
வந்தவர்க்கடிமை வாழ்க்கையோமிடிமை
வெந்ததுபோதும் விடுதலை காண்பாய்!

[எதிரே களப்பிரப்படை வீரர்கள் இருவர் வருகின்றனர். இளவரசி பூபாலியின் பல்லக்கு வருகின்றது. நின்று பாட்டைக் கவனிக்கின்றனர்.]

முதல்வன்:- (அருகே சென்று) நிறுத்து. என்ன பாட்டுப் பாடறே நீ?

கடுங்:- இனிக்கும் செந்தமிழ்ப் பாட்டு!

முதல்:- பாண்டி மண்டலத்திலே தமிழ்ப் பாட்டுப் பாடக்கூடாதுங்கறது தெரியுமா ஒனக்கு?

கடுங்:- அப்படியா? ஏன் பாடக் கூடாது?

இரண்டா:- கபோதி! பாலி மொழிதான் அரசாங்க மொழி! குடிமக்கள் பாலியில்தான் பேசணும், பாலியில்தான் எழுதணும், பாலியில்தான் பாடணும்; கண்டக தேவர் ஆட்சியிலே இந்தக் கட்டளையை மீறவங்க கண்டதுண்டமா வெட்டப்படுவாங்க!

கடுங்:- நான் தமிழன்; என் தமிழ் நாட்டில் என் மொழியில் நான் பாடுவது குற்றமா?

முதல்:- யாருடாவன் மொரட்டுப்பய! பொல்லாத கேள்வி கேட்கிறான். அறுடா அவன் நாக்கை!

இரண்:- கிழிடா பாடின வாயை!

[கடுங்கோனைத் தாக்க நெருங்குகின்றனர். பல்லக்கினின்றும் இறங்கிய இளவரசி வருகிறாள்.]

பூபாலி:- நிறுத்துங்கள்! சச்சரவு ஏன்?

முதல்:- (பணிவோடு) இளவரசியாரே! இவன் தமிழனாம்! வெகு துணிச்சலாத் தெருவுலே தமிழ்ப் பாட்டுப்பாடறானுங்க!

இரண்:- நிறுத்துடான்னா; ஏம்பாடக் கூடாதுன்னு கேள்விவேறே கேக்கறானுங்க!

பூபாலி:- தமிழரல்லாதவரையும் தன் வயப்படுத்தும் செந்தமிழ்ப்பாட்டை நானும் கேட்டேன்! சிந்தை குளிர வைக்கும் செவ்விய கீதமழை, எங்கு பொழிந்தாலென்ன? நாமேன் தடுக்கவேண்டும்?

முதல்:- மகாராசா கட்டளையாகப் பட்டதுங்க...

பூபாலி:- நன்றாக நானறிவேன். இவர் பாலிமொழியைப் பகைக்கவில்லை! தமிழில் பாடுவோரைத் துன்புறுத்துவது தகாதசெயல்! மரியாதையோடு போய்விடுங்கள்.

இல்லையேல் மன்னரிடம் நானே கூறுவேன்!

இரண்:- வேணும் இளவரசி! மன்னிச்சிடுங்க!

முதல்:- இனிமே நாங்க இப்படித் தடுக்கமாட்டோம்!

[இருவரும் போகின்றனர்]

கடுங்:- (வியந்து) நாட்டின் இளவரசியார், நற்றமிழின்பால்கொண்ட காதலுக்கு மிக்க வணக்கம்!

பூபாலி:- வணக்கம்! இசைக்கலையில் வல்ல உங்களை, நேற்று தளவாய் ஒருவரோடு அரண்மனை வாசலில் பார்த்தேன்! இன்று இங்கு பார்க்கிறேன். ஆனால், யாரென்பது...

கடுங்:- கூறுகிறேன். கொற்கையில் வாழுபவன். என்பெயர் கடுங்கோன்! தளவாய் சேந்தன் வழுதியாரின் அன்பு மைத்துனன்! இசைக்கலையில் மட்டுமன்று; தமிழ்க்கலையனைத்திலுமே சிறிது பயிற்சியுண்டு எனக்கு!

பூபாலி:- மிக்க மகிழ்ச்சி! தமிழ்வல்ல கலைஞரே! என் மொழி பாலியென்றாலும், தமிழிடத்தே தனியார்வமுண்டு. தமிழ்க்கலைகளையறிந்து கொள்ளப் பேராசையுண்டு; வாய்ப்புக் கிடைக்கவில்லையே!

கடுங்:- பாலைவனத்திலே நந்நீர் ஊற்று! பருந்துகளுக்கிடையே ஓர் பைங்கிளி! பெருவியப்படைகிறேன். இளவரசி! தங்கள் விருப்பம் மெய்யானால், முடித்துவைக்க என்னால் முடியும். என்றாலும் தங்களைச் சந்திப்பது!...

பூபாலி:- முடியக்கூடியதுதான். ஆண்கள் நுழையமுடியாதது அரண்மனைப் பூங்கா. தாங்கள் வருவதற்குத் தடம் காட்டுகிறேன் நான்.

கடுங்:- ஐயயோ! பெண்ணல்லவே நான்! எப்படி நுழையமுடியும்?

பூபாலி:- மன்னிக்கவேண்டும். என் தோழி வைகைமூலம் நான் அனுப்பும் மாறுவேடப் பொருட்கள் உங்களை என்னிடம் சேர்த்துவிடுவன! கருணைகொள்ளுங்கள், கலைவெறிகொண்டாளிடம்!

கடுங்:- உங்கள் தமிழ்ப்பற்றும், கலைப்பற்றும் என்னை இணங்கத் தூண்டுகின்றன. ஆனால், மன்னவரின் தண்டனையோ...

பூபாலி:- உங்களை ஏதும்செய்யாது! என் தந்தையை நான் பார்த்துக் கொள்கிறேன்!

கடுங்:- மிக்க நன்றி. நான் இருப்பது எனது நண்பன் சிவமாறன் இல்லத்தில்.

பூபாலி:- மகிழ்ச்சி! வைகை வருவாள். நான் வருகிறேன்!

[போகிறாள் பூபாலி]

சிவமா: வைகை! என் இல்லம் தெரியுமா? உனக்கு?

வைகை:- (நின்று) சொல்லுங்க! தெரிஞ்சுக்கிறேன்.

சிவமா:- மேலக் கோட்டைவாசல். வடக்குப்புறத்து வரிசையில் மூன்றுவதுவீடு!

வைகை:- ரொம்பச் சரிங்க!

[அவளும் செல்கிறாள்]

சிவமா:- கடுங்கோன்! எதிர்பாராத வாய்ப்பொன்று கிட்டிவிட்டது! இளவரசியின் தொடர்பு, நமது இலட்சிய நிறைவுக்கு ஏற்ற மளிப்பது! ஆயினும், நினைவில் வைத்துக்கொள்; இது நெருப்பு!

கடுங்:- இருக்கட்டுமே, நாமென்ன விறகாகிவிடவா போகிறோம், எரிந்துவிடுவதற்கு? கவலைப் படாதே! வா போவோம்!

[இருவம் புறப்பட்டுச் செல்லுகின்றனர்.]

"ஐயயோ! ஐயயோ! காப்பாதுங்க! காப்பாத்துங்க!"

[அலறியவண்ணம் குடிமகனொருவன் ஓடிவந்து கடுங்கோன் காலில் விழுகிறான்]

கடுங்:- (நின்று, பதறி) என்னய்யா! என்ன செய்தி? ஏன் பதட்டம்? என்ன நடந்தது?

குடிம:- ஐயயோ! பட்டம் பகல்லே அக்ரமம் நடக்குதே! என்னை அடிச்சுப் போட்டுட்டு என் பெண்டாட்டியைத் தூக்கிகிட்டுப் போயிட்டாங்களே! போயிட்டாங்களே!

கடுங்:- யாரையா? எப்பொழுது?

குடிம:- இப்பத்தானுங்க; களப்பிரப் படைவீரனுங்க ரெண்டுபேரு, சிவன் கோயிலுக்குப்போன எங்களை வழிமறிச்சு, போகாதேன்னு திட்டினுங்க; அடிச்சாங்க! கிளியாட்டம் எம் பெண்டாட்டியைத் தூக்கிக்கிட்டே போயிட்டாங்கய்யா! ஐயா! இந்த அக்கிரமத்தைக் கேக்கறவங்க இல்லியா? அதிகாரிங்களே இப்படிச்செய்தா, குடிகள் எப்படி ஐயா பொழைக்கிறது? மானம் மரியாதையா பெண்டுபிள்ளைகளை எப்படி ஐயா காப்பாத்தறது?

கடுங்: ஐயா! உடனே புறப்படும் அரசரிடம் சென்று நடந்தன கூறும். வழக்குரைத்து நீதி கேளும். துணைக்கு நானும் வருகிறேன் நண்பா!

சிவமா:. நான் தேவையில்லை! நீமட்டும் சென்றுவா!

குடிம:- வாங்கய்யா! வாங்கய்யா! நீங்க மகராசரா இருக்கணும்! மகராசரா புள்ளைகுட்டியோட பொழைக்கணும்!

[இருவரும் வேகமாகப்போகின்றனர்]

O

காட்சி - 3

இடம்:- மதுரை அரண்மனை

காலம்:- பிற்பகல்

[மன்னன் கண்டகதேவனும் மகள் பூபாலியும் இருக்கின்றனர்.]

கண்ட:- பூபாலி! நுண்கலை விருப்பம், நமது களப்பிர மரபுக்கே தீங்கிழைப்பது! பாலிமொழியைக் காட்டினும் தமிழ் எவ்வகையில் சிறந்தது? மேன்மைக்குரியது?

பூபாலி:- பழம்பெருமையும், இனிமையும் நிறைந்த பண்புக் கலைமொழியப்பா கன்னித் தமிழ்!

கண்ட:- கிடையாது. மகத்துவம் மிக்கது நமது பாலி! மகான்களான வரருசியும், வால்மீகியும் இலக்கணம் வகுத்துள்ளனர் நமது மொழிக்கு. அபப்பிரம்சம், பைசாசி, சூசிகா பைசாசி, மாகதி, சௌரசேனி, பிராக்ருதம் ஆகிய ஆறு பிரிவுகளையும் தன்னகத்தே கொண்டது; சமணம், பௌத்தம், காபாலிகம், காளாமுகம் போன்ற சமயாச்சார இலக்கியங்களை ஈன்றெடுத்தது. இந்த நாட்டைக் களப்பிரர்கள் ஆளத்தொடங்கிய நாள்முதல் இன்றுவரை ஆட்சிமொழியாக விளங்குவது. இத்தகைய சிறப்புகளைப் பெற்ற நமது பாலியை வளர்ப்பதைவிட்டு, அடிமைத் தமிழையும், அவற்றின் கலைகளையும் நாட்டின் இளவரசியே பயிலுகிறாள் என்

ருல், ஆட்சிமுறைக்கே அவகேடு! ஒருக்காலும் அனுமதிக்கமாட்டேன்!

[ஒரு காவலன் வந்து வணங்குகிருன்.]

காவ:- மகாராஜா! வந்தனம். சமுகத்திலே முறையிட யாரோ வந்திருக்காங்க.

கண்ட:- வரவிடு.

[காவலன் செல்ல, குடிமகனும், அவன் பின்ஞல் கடுங்கோனும் வருகின்றனர்.]

இருவரும்:- வணக்கம்! மாமன்ஞ! வணக்கம்!

கண்ட:- என்ன குறை நேர்ந்தது, உங்களுக்கு?

குடிம:- மன்னர் பெரும! என்னேட பெண்டாட்டியும், நானும் சிவன் கோயிலுக்குப் போயிக்கிட்டிருந்தோம். படைவீரர்கள் ரெண்டு பேரு எதிரே வந்தாங்க. சிவனை வழிபடக்கூடாது. புத்தன்—அருகன் கோயிலுக்குப் போங்கன்னு சொன்ஞங்க. முடியாதுன்னேம். மூர்க்கத்தனமாத் தாக்கிஞங்க! என்னை அடித்துப்போட்டு, என் மனைவியை அலக்கா தூக்கிகிட்டுப் போயிட்டாங்களே! மாமன்ஞ என் பெண்டாட்டியை எனக்குக்கெடைக்கப்பண்ணணும். துட்டர்களைத் தண்டிக்கணும!

கண்ட:- படைவீரர்கள் யார்?

குடிம:- களப்பிரர்கள்!

கண்ட:- அப்படியாஞல் பாதக மில்லை. உன் மனைவியை விரும்பி யிருக்கிருர்கள். அனுபவிக்கட்டும் போ! நீ வேறு கல்யாணம் செய்து கொள்!

குடிம:- (பதைத்து) மாமன்ஞ! இதுவா அரச நீதி? இதுவா அரச தர்மம்?

கண்ட:- ஆம்! அவர்கள் தன்னுயிரைத் துரும்பாக மதித்துப் போர் புரிந்து நாடு காக்கும் வீரர்கள். அவர்கள் குற்றமே புரிந்தாலும் தண்டிக்கமாட்டேன்!

குடிம:- மன்ஞ! குத்தம் பண்றவங்களைத் தண்டிச்சு, மத்தவங்களோட உடமையைக்காப்பாத்திக் கொடுக்கறதுதான் அரசாங்கம்னு நம்பியிருந்தேன். நீ குடிமக்களைக் காப்பாத்தற அரசனல்ல; கொடுங்கோலன்! கொள்ளைக்கூட்டத் தலைவன்!

கண்ட:- (சினந்து) ஆ! என்னையே இழிவுபடுத்துகிருயா? கோழையே!...

[வாளையுருவி நெஞ்சில் பாய்ச்சுகிருன் வேந்தன். 'ஆ! ஐயோ!' என்று அலறி வீழ்ந்து மடிகிருன் குடிமகன்.]

கடுங்:- வேந்தே! நீரளித்தது விசித்திரமான தீர்ப்பு! நெஞ்சம் குமுறி நீதி பெற வந்த பஞ்சை மகனைப் பதைக்க உயிர் போக்கிவிட்டீர்! நீதியைப் பரிபாலிக்கவேண்டிய மன்னனின் மகத்தான கடமையை வீதியிலே வீசியெறியும் உடைந்த கலமாக்கிவிட்டீர்! நீரோ அறநெறி காக்கும் மன்னர்? நீரோ குடிமக்களின் குறைதவிர்க்கும் கோமகன்?

கண்ட:- நீ யாரடா என்னைக் கேட்பதற்கு?

கடுங்:- நான் யார்? குற்றம் எவர் செய்தாலும் குற்றமெனக் கூறியவன்—நெற்றிக்கண்ணைக் காட்டிஞலும் அஞ்சாத நேர்மைத் தமிழ் மறவன் நக்கீரன் கால்வழியிலே வந்தவன்! குடிமகனின் பழிச்சொல் கேட்டு மனம் பதறிக் குற்றமிழைத்த கையை வாள்கொண்டு வெட்டிக்கொண்ட பொற்கைப் பாண்டியனின் பரம்பரை நான்!

கண்ட:- இந்த வீணனைத் தூண்டிவிட்டு என்னிடம் வாது புரிய வந்தவனே?

கடுங்:- நீதி பெற வந்தவன்! நேர்மையற்ற வேந்தே! மன்னுயிர்காக்கும் அரசுக் கட்டிலில் நன்னெறி மாய்க்கும் மதோன்மத்தன் வீற்றிருப்பது, குடிகளுக்கு மட்டுமன்று; பழம்பெருமை வாய்ந்த பாண்டிய மண்ணுக்கே அவமானம்! கொள்ளைக்காரனுக்கு ஆதரவு காட்டும் கொலைகாரன்! நீர் ஏறக்கூடாது சிங்காதனம்! ஏந்தக் கூடாது செங்கோலை! ஆளக் கூடாது பாண்டிய நாட்டை!

கண்ட:- இராசத்துரோகி! இவ்வளவு துணிச்சலாக என்னை எதிர்த்துப் பேசும் நீ, உலகத்திலேயே வாழக் கூடாது!

[தாக்குகிருன் மன்னன். தன் உடைவாள் கொண்டு தடுக்கிருன் கடுங்கோன். இருவரும் வாட்போர் புரிகின்றனர். இளவரசி பூபாலி அஞ்சிப் பதறுகிருள். காவலாளிகள் இருவர் ஓடிவந்து கத்தி வீசுகின்றனர், வெட்டி வீழ்த்துகிருன் கடுங்கோன். மன்னன் கண்டகனையும் வீழ்த்துகிருன் "ஐயோ" என்று அலறுகிருள் பூபாலி. மார்பிலே குத்தப்போகும் கடுங்கோனை ஓடிவந்து தடுக்கிருள்]

பூபாலி:- (பதறி) வேண்டாம்! வேண்டாம்! கொல்லவேண்டாம் என் தந்தையை விட்டுவிடுங்கள். எனக்காக விட்டுவிடுங்கள். அவர் செய்த தவறுக்கு நான் மன்னிப்பு வேண்டுகிறேன். மன்ருடிக் கேட்கிறேன். கருணை கூர்ந்துவிட்டு விடுங்கள்; விட்டுவிடுங்கள் தந்தையை!

[கைபற்றிக் கெஞ்சுகிருள். கடுங்கோனின் சினம் தணிகிறது.]

கடுங்:- (எழுந்து) நன்று! மூர்க்கனே! வீரனுக்கு வீரன் உலகிலுண்டு என்பதை மறந்துவிடாதே! உனது மகளுக்காக உன்னைக் கொல்லாது விடுகிறேன்.

[வேகமாகச் சென்று மறைகிருன் கடுங்கோன். எழுந்து நிற்கிருன் கண்டகதேவன். வீரர்கள் சிலர் ஓடி வருகின்றனர். தளவாய் சேந்தன்வழுதியும் வருகிருன்.]

சேந்:- (பதட்டமாக) வேந்தே! என்ன நேர்ந்தது? என்ன நேர்ந்தது?

கண்ட:- சேந்தன்வழுதி! எவனே ஒரு தமிழ் முரடன், என்னைக் கொல்ல வந்தான்!

சேந்:- (வியந்து) ஆ! தங்களைக் கொல்லவா? யார் அந்தத் தமிழன்? எங்கே சென்ருன்? காவலாளிகளே! ஓடிப் பிடியுங்கள் அந்த முரட்டுப் பயலை! எங்கிருந்தாலும் கொண்டு வாருங்கள் இதயமற்றவனை!

[காவலாளிகள் ஓடுகின்றனர்]

கண்ட:- பூபாலி! உனக்காக விடுகிறேன் என்ருனே; உனக்குத் தெரியுமோ அவன் இன்னனென்று?

பூபாலி:- தெரியாதப்பா! பார்த்ததேயில்லை. என் கதறலும் கண்ணீரும் அந்தக் கருணையாளன் இதயத்தைக் கரையவைத்துவிட்டன!

கண்ட:- கருணையாளன்! என்னைக் கொல்ல முனைந்த கயவஞ கருணை

யாளன்? என் பகைவன்! எனது ஆட்சியிலே வாழத் தகுதியற்றவன்! சேந்தன் வழுதி! தமிழன் என்று தற்பெருமை பேசிக் கொண்டான் அந்தத் தறுதலை! விடக்கூடாது அவனை. ஆமாம்! நீரும் தமிழன் தானே!

சேந்:- இருந்தாலும், தமிழன் என்ற உணர்வைக் காட்டிலும், பணி தான் எனக்கு முக்கியம்! அரசியற் கடமையை நிறைவேற்ற என் தமிழனை மட்டுமன்று; இறைவனையே சிறைப்படுத்து என்றாலும், கட்டளையைச் சிரமேற் கொள்வேன்!

கண்ட:- நன்று. சேந்தன் வழுதி! பிரதம தளவாய் உருத்திரதேவன் மாண்டபிறகு, அந்தப் பதவிக்கு இன்றுவரை யாரும் நியமிக்கப்படவில்லை. என்னைக் கொல்ல முனைந்த கொடியவனைப் பிடித்துக் கொடுத்தால், நீர்தான் பாண்டி மண்டலத்தின் பிரதம தளவாய்!

சேந்:- நன்று வேந்தே! சிறிது காலக் கெடு கொடுங்கள்! நிச்சயமாக நிறைவேற்றுவேன் எனது கடமையினை.

கண்ட:- நல்லது. சென்றுவாரும்.

[பணிந்து செல்லுகிறான் சேந்தன் வழுதி]

(தொடரும்)

16-வது இதழ் விற்பனையாகிறது!





"தூரிகையைக் கையிலெடுத்து, குழைத்து வைக்கப்பட்டுள்ள வண்ணச் சுண்ணத்தில் தொட்டு எடுத்துவிட்டானேயானால், அவன் சிந்தனையின் கண் தோன்றிய காரிகையோ, கவின்பொருளோ எழில் உருப்பெற்றுவிடும்" என்று இளம்பரிதியின் ஓவியத்திறனைப் புகழ்ந்து போற்றினார்கள் மக்கள்!

உண்மைதான்!....அவன் தீட்டும் ஓவியங்களைக் காண்போர் அட்டியின்றி புகழ்ந்திடுவார்கள்!

ஆனால், இளம்பரிதியின் மனத்தில் ஒரு குறை நிறைந்திருந்தது! கலையழகு பொதிந்த ஒரு காரிகையைத் தன் தூரிகையின் உதவியால் வடித்தெடுக்க இயலா நிலையே! அவனுடைய மன அமைதியையும் குலைத்தது அக்குறை!

மன்னர் மணிமாறன் இளம்பரிதியின் ஓவியத்திறனைப் புகழ்ந்து போற்றி ஊக்கந்தந்து, கலைக்கூடம் ஒன்று அமைத்து ஓவியவல்லுனரைப் பேணிக்காத்துப் பயிற்சிதரும் ஆக்கத்தில் அவனை ஈடுபடுத்தினார்!

மன்னர் மகள் மான்விழி ஓவியக் கலையில் நாட்டம் உள்ளவள்போல் அடிக்கடி கலைக்கூடத்திற்கு வந்து போவாள்! பருவத்தின் ஓட்டம் நிறைந்திருக்கவே இளம்பரிதியின் காதலை வேண்டிக் கலைக்கூடம் நாடி வந்தாள்!

காலச்சக்கரம் மின்னலையும் வெல்லும் வேகத்தில் தன் போக்கில் ஓடிக்கொண்டிருந்தது. இளம்பரிதியின் ஓவியத்திறன் அரைக்க அரைக்க சந்தனம் மணப்பதைப் போன்ற நிலையில் சிறப்புற்றுத் திகழ்ந்தது!

மன்னர் மணிமாறன் தன் அன்பு மகள் மான்விழியின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு ஓவியப்போட்டி ஒன்று வைத்தார்! போட்டியில் கலந்துகொள்ள வேண்டி பல நாட்டு ஓவியர்களுக்கு அழைப்புகள் அனுப்பப்பட்டன!

மான்விழியின் வேண்டுகோளுக்கிணங்கி இளம்பரிதியும் போட்டியில் கலந்துகொண்டான். தனிமையை நாடி மலைக்குன்றை அடைந்தான். ஓவியம் வரைய அதுவே தகுந்த இடமாக அவனுக்குப்பட்டது! ஆழ்கடலில் மூழ்கினால் அழகு முத்து கிடைப்பதுபோல், சிந்தனை என்ற ஆழ்கடலில் மூழ்கக் கற்பனை மங்கை ஒருவள் அவன் சிந்தனையில் நின்று நிலவினாள்!

கற்பனையில் தோன்றிய காரிகைக்கு, தூரிகையைக் கொண்டு சுண்ணத்தின் துணையால் உருவம் கொடுத்தான்! அவனுடைய மனத்தில் ஒரு பெருங்குறையாக இருந்த சுமை வெய்யோனைக் கண்ட பனி மூட்டம்போலாயிற்று! அவன் மனத்திரையில் நின்று நிலவிய கலையழகு படைத்த மங்கையாகவே இருந்தது அவனால் தீட்டப்பட்ட ஓவியம்! அவ்வெழில் ஓவியத்தைக் கண்ட இளம்பரிதி தன் நிலை மறந்தான்!......

தோன்றி மறையும் மின்னல் போல், அவனால் தீட்டப்பட்ட ஓவியமும் மறைக்கப்பட்டது சாணத்தால்! ஆத்திரமடைந்த இளம்பரிதி தன் ஓவியத்தின் அருகே ஓர் எழில் மங்கை நிற்பதைக் கண்டான்!

"நான் வரைந்த ஓவியம் உனக்குப் பிடிக்கவில்லையா?" என்றான் இளம்பரிதி.

"ஓவியமாவது, மண்ணுங்கட்டியாவது, நான் குரல் கொடுத்தும், உன் போக்கில் மெய்மறந்து பின்னுலேயே போய்க்கிட்டு இருக்கிறாய். இன்னுங் கொஞ்ச இருந்தால், கீழே விழுந்து செத்திருப்ப" என்றாள் அவள்!

தன் நிலை உணர்ந்த இளம்பரிதி அவளுக்கு நன்றி கூறினான்!

"உன் பெயர் என்ன? என்றான்.

அவனுடைய அந்தக் கேள்வி கேட்டு முதிர்ந்த நெற்கதிர்போல் நாணத்தால் தலைகவிழ்ந்து "என் பெயர் பூங்கொடி" என்று பதில் தந்தாள் அப்பைங்கொடியாள்!

இளம்பரிதியைத் தன் குடிசைக்கு அழைத்துச்சென்று உணவளித்தாள்! பூங்கொடியின் குடிசையில் தங்கியிருந்து போட்டிக்கான ஓவியத்தைத் தீட்டி முடிக்கவும், அவர்களிடையே காதல் ஆட்சிசெய்யவும் சூழ்நிலை துணைநின்றது! அவர்கள் அன்பால் ஒருவரில் ஒருவராகத் திகழ்ந்தார்!

இளவரசியின் பிறந்தநாள்விழா நெருங்கிவிட்டதைக் கண்ட இளம்பரிதி, புதுமலர் மணம்போல் பருவ எழில் கொண்ட பூங்கொடியிடம், விழா முடிந்ததும் வந்து அவளை அழைத்துச் செல்வதாகக் கூறிப் பிரியாவிடை பெற்றான்!

ஓவியப் போட்டியில் இளம்பரிதிக்கே பரிசு கிடைத்தது! மன்னர் மணிமாறனிடம் தன் நிலையைக் கூறிப்பூங்கொடியை அழைத்துவரச் சந்தர்ப்பத்தை நோக்கியிருந்தான். அன்று மன்னர் கலைக்கூடத்திற்கு வந்தார். அதுவே ஏற்றநேரம் என்று கருதி மன்னரிடம் தன் விருப்பத்தைக் கூறினான். மன்னர் மணிமாறனும் அவன் விருப்பத்திற்குத் துணை நின்றார்!

கன்னி ஒருத்தியின் கொடியிடையைத் தன் காதலன் பிடித்துநிற்க; கன்னியவள் கொழுகொம்பைப்பற்றிப், படர்ந்திருக்கும் கொடியின் பாங்குபோல் தன் காதலன் மார்பில் சாய்ந்து நிற்கும், எழில் ஓவியம் ஒன்றைக்கண்ட இளம்பரிதி இன்பக் கடலில் மூழ்கினான்!

கலை இன்பம் மேவிய உயிரோட்டமுள்ள ஓவியம் தீட்டவல்ல மேதையே! தாவிய பூங்கொடிபற்றிப் படர்ந்து நிற்க, துணை நின்ற கொழுகொம்பின் மாட்சிபோல் காளையவன் மார்பில், கன்னியவள் சாய்ந்து நிற்கும் காட்சி கண்டு மன நெகிழ்ச்சி கொண்டு நிற்பதும் ஏனோ? என்று புகழ்காவியம் தீட்டி நின்றாள் மான்விழி!

"தேன்மொழித் தமிழில் மான்விழி கொண்ட இளவரசியார் புகழ்வது 'நான்' என்ற காரணத்தினாலா அல்லது இளவரசியின் புகழுரையை 'ஏன்' என்று கேட்க இங்கு யாரும் இல்லை என்ற சூழ்நிலையில் உண்டான 'தான்' என்ற பெருமையினாலேயா?" என்று கிண்டல் செய்தான் இளம்பரிதி.

"அன்றாடம்வாடிக்கையாகிவிட்ட உங்களுக்கே உரிய வேடிக்கை போதும், உங்களுக்கு உரிமையாக நினைக்கும் எனக்கு 'இளவரசியார்' என்ற மரியாதை எதற்கு?" என்றாள் மான்விழி!

"மன்னித்துவிடுங்கள், அதற்குத் தகுதிவாய்ந்தவன் அல்ல. செடியில் தோன்றும் அரும்பு மலர்வது ஒரு தடவைதான், செடி என்ற மானிட நெஞ்சில் காதல் என்ற அரும்பு மலர்வது ஒருதடவைதான், நானும் வேறொரு மங்கையைக் காதலிக்கிறேன். அவளை மணக்க மன்னரிடமும் சம்மதம் பெற்றுவிட்டேன். அவளை அழைத்துவரத்தான் கிளம்பிக்கொண்டிருக்கிறேன். மன்னித்து என்னை வாழ்த்தி வழி அனுப்புங்கள் இளவரசியாரே" என்றான் இளம்பரிதி.

வந்த வழியே இளவரசி சென்றாள் அவனை வாழ்த்திவிட்டு. இளவரசியின் நடையழகில் தன் விழியைச் செலுத்தி நின்றான். மங்கையவள் சென்று மறைந்தாள்! நம்பியவன் தன் துணையைக் கண்டு அடையப் போகும் இன்ப நிலையை எண்ணி நெஞ்சில் இன்பங்கொண்டான்!

விண்ணில் சிறகடித்துப் பறந்து செல்லும் பறவை ஒன்று அவன் கண்ணில் பட்டது! உடனே அவனுடைய மனம் "நமக்கும் பறவைக்கு இருக்கும் சிறகு இருந்தால் இந்நேரம் பூங்கொடியை அடைந்திருக்கலாமே" என்று எண்ணிய வண்ணமாய் இருக்க, நடையில் புது வேகத்தைக் கூட்டினான்.

பல இன்ப நினைப்பில் நனைந்தவாறு செல்லுகையில்...மாமரத்தில் மாங்கனி ஒன்று பறவைகளின் பார்வையினின்று தப்பிப் பிழைத்து எட்டுந்தொலைவில் இருப்பதைக் கண்ட ஒருவன், பறித்துச் சுவைத்து மகிழும் காட்சியைக் கண்டான். இன்னும் சிறிது நேரத்தில் சமுதாயம் என்ற மாமரத்தில் கனிந்த 'பூங்கொடி' என்ற மாங்கனியைச் சுவைக்கப்போவதையும் எண்ணிப் பெருமைமிகக்கொண்டான்!

பூங்கொடியின் குடிசையை வந்தடைந்தான். குடிசையில் பொருள்கள் சிதறுண்டிருப்பதைக்கண்டான். பூங்கொடியை அங்கு காணமுடியவில்லை. குரல்கொடுத்துக் கூவினான். பதில் இல்லை. சோர்வோடு கலைக்கூடத்திற்குத் திரும்பினான். அங்கே! ....

மான்விழி நின்றிருக்கக் கண்டான்!......

நீர்மேல் எழுந்த குமிழாகத் தன்னுடைய காதல் ஆனதை எண்ணி வருந்தினான். அன்று மலைக்குன்றில் பிரிய இருந்த உயிரைக் காத்து "உயிர்கொடுத்த" மங்கை, இன்று அந்த உயிரின ஓட்டத்தில் கலந்து உறவாடியபின் எங்கோ மறைந்துவிட்டாளே! என்று எண்ணி மனத்தை வாட்டத்தில் நனைத்தான்!

பூங்கொடியைக்கொன்றுவிட்டால் இளம்பரிதியின் காதலை அடையலாம் என்று எண்ணிய இளவரசி மான்விழியைச் சூழ்ச்சியில் கொன்றதை இளம்பரிதி எப்படி அறிவான்?

செடியில் தோன்றிய ஒரு அரும்பு மலர்ந்து மணம் பரப்பியபின் வாடி விழுந்ததும் மற்றொரு அரும்பு தோன்றி மலர்ந்து மணம்பரப்புவது தானே இயற்கை! ஆனால், செடியே அழிந்தபின் மற்றொரு அரும்பு தோன்றுவது எங்ஙனம்?

இளம்பரிதியின் மனம் என்ற செடியே வாடிவதங்கி வளம் இழந்தபின், அரும்பு மலர்வது எங்ஙனம்? இளம்பருதியின் நெஞ்சில் பூங்கொடியே நிறைந்திருந்தாள்!

அதிகார ஆணவத்தின் முன் ஏழைகளின் அன்புக் கனவுகள் நிறைவேறுமா? நிறைவேறும்!...... எப்பொழுது?....அன்பே வடிவான சனநாயகம் ஆட்சி செய்தால்...... நல்லவரும், எளியவரும் வாழ வழி பிறக்கும்! அவர்தம் இன்பமும் சிறக்கும்!

அறுவை மருத்துவம்

[கனகு]

காலை 10 மணிக்கே வெயில் சுள்ளென்று காய்ந்து பொசுக்கத் தொடங்கிவிட்டது. எதிரே நெடுஞ்சுவர்போல் தென்படும் பெருமலையின் அழகோவியக் காட்சியைத் தினந்தினம் பார்த்துப் பார்த்தும் சலிப்புத் தட்டாத என் உள்ளம் சுட்டுப் பொசுக்கும் அந்த வெயிலிடையேயும் அந்த மாமலை காட்டும் எழிற்காட்சியைக் கண்டு களிகொள்ள விழைந்தது. தகிக்கும் வெயிலை மறந்து சாலை வழியே மெல்ல நடந்துகொண்டிருந்தேன். நின்றேனே, நடந்துகொண்டிருந்தேனே!—பார்வை மட்டும் சற்றுத் தொலைவிலிருக்கும் அந்தப் பெருமலை மீது நன்கு படிந்துகொண்டு கிடந்தது.

“என்ன? — பரவச நிலை கட்டு மீறிப் போய்விட்டது போலும்!” என்ற குரல் கேட்ட பிறகுதான் நான் நிற்கின்ற சூழலின் நினைவுக்கு மனம் வந்தது. சாலையோடு வந்துகொண்டிருந்த மாணிக்கம் என்னருகில் வந்து, மிதிவண்டியிலிருந்து கீழே இறங்கினான்.

“மாணிக்கம், வா, வா! என்று வந்தாய்? விடுமுறையோ?” என்றேன் நான்.

“இன்றுதான் வந்தேன், காலையில்” என்றான் மாணிக்கம்.

மாணிக்கம் என் நண்பன். என்னோடு படித்தவன் இப்போது பட்டணத்தில் ஒரு செய்தித் தாளுக்குத் துணையாசிரியன். விடுமுறையில் இன்று ஊர் வந்துள்ளான்.

அருகில் ஒரு பெரிய கிணறு. அந்தக் கிணற்றுக்குப் பக்கத்தில் நல்லதொரு மேடு. அந்த மேட்டின் மீது பெரிய பூவரச மரமொன்று. எங்கெங்கும் தீயை வாரி இறைத்துக்கொண்டிருக்கும் அந்தக் கடும் வெயில் வேளையில் அந்தப் பூவரச மரத்தின் பசுமைக்கோலமும், அதன் அடியிற்காணும் நிழலும், அதனைச் சுற்றிலுமுள்ள எழிலும் என்னைக் கவர்ந்தமை போலவே மாணிக்கத்தின் கண்ணையும், கருத்தையும் இழுத்தன. மிதிவண்டியைச் சாலையோரமிருந்த மரத்தடியில் நிறுத்தினான் மாணிக்கம். இருவரும் பூவரச நிழலை நோக்கி நடந்தோம். அங்கு சென்று அமர்ந்தோம்.

பாரிஸ் நகரத்தில் நடந்ததாக இங்கே குறிப்பிடப்படும் கொடுமைகள் இன்று அல்ஜீரியாவில் பிரஞ்சு வெள்ளையர் நடத்தும் மாபெருங் கொடுமையினும் சிறியனதாம். என்றாலும் விடுதலை வேட்கை கொண்டோருக்கும், அந்த விடுதலை வேட்கையை நசுக்க முனைவோருக்கும் நல்ல பல பாடங்கள் இங்கே உள்ளன என்பதால் அவற்றை இங்கே தொகுத்துக் கூற முன்வந்தேன். இந்தப் பாரிஸ் நிகழ்ச்சியை உலகுக்கு அறிவிப்பவர் மார்க் ஆண்ட்ரூஸ் என்னும் ஆங்கிலேயர்.

“என்ன, பாருங்கள்! இந்தத் துணைக்கண்டத்து எல்லா மொழிகளுக்கும் மூலம் வடமொழிதான் என்று கூறியிருக்கிறார் ஒருவர்!” என்று சலித்தாற்போல் பேசினான் மாணிக்கம்.

“ஏன் கூறமாட்டார்! தமிழே வாழ்வு! தமிழே உயிர்! என்று கூறுகின்ற உன்னைப் போன்றவர்களே அத்தகையோரின் கருத்துக்கு மதிப்பளிக்கும்போது தாராளமாக இதுவும் சொல்வார்கள்! இன்னும் சொல்வார்கள்!”

“இன்னொரு செய்தி பார்த்தீர்களா — இலங்கைச் செய்தி! அங்குள்ள தமிழ்ப்பிள்ளைகள் தமிழ் படிக்கும் வாய்ப்பை இழக்கும் நிலையை உண்டாக்கப் போகிறார்களாம் ஒரு சட்டத்தின் மூலம். இன்னொரு சட்டத்தின் மூலம் அங்கே சிறப்பாகத் தமிழர் நலனுக்காகப் பாடுபடும் நல்ல நாளேடு ஒன்றையே இல்லாமலடிக்கப் போகிறார்களாம்!”

“அதோடு இன்னொரு செய்தியையும் நீ தெரிந்திருக்க வேண்டுமே! அறிவுக்குச் சவாலாக, நியாயம், மக்களாட்சிப் பண்பு, மாந்தரின் நல்லியல்பு இவற்றிற்கெல்லாம் சவாலாக அரியணையில் ஏறி நிற்கும் ஒருவர் அறுவை மருத்துவத்தைப்பற்றிப் பேசியிருக்கின்றாரே, அதையும்!”

“என்ன? அறுவை மருத்துவமா? ஓ, ஓ, ஓ! அதுவா!”

“என்ன அதுவா! சிந்தித்துப்பார்! நீ சொன்ன இரண்டு செய்திகளுக்கும் இந்த அறுவை மருத்துவங்கள் தாம் காரணம்!”

சற்று நேரம் பேசாமலிருந்துவிட்டு மாணிக்கம் கேட்டான். “இவர்களா ‘அப்படிப் பேசு! இப்படிச் செய்!’ என்று சொல்கிறார்கள்?”

“தமிழை அழி! தமிழை இழித்துப் பேசு என்று வாய் திறந்து சொல்ல வேண்டுமா என்ன?” இவர்களின் செய்கைகளே அப்படிச் செய் என்று சொல்லாமற் சொல்கின்றனவே!” என்று கூறிவிட்டு, பார்வையைச் சற்று எட்டிச் செலுத்தினேன் நான். அங்கே ஒரு தோட்டம் என் கவனத்தை ஈர்த்தது. “அதோ பார் மாணிக்கம், ஒரு சிறிய தோட்டம்.” என்று தோட்டத்தைச் சுட்டிக்

காட்டித் திரும்பவும் நானே பேசினேன்.

"அந்தத் தோட்டத்தில் கத்தரியும், தக்காளியும், கொத்தவரையும், வெண்டைச் செடிகளும் செழித்து வளர்ந்திருக்கின்றன. அதன் மூன்று புறங்களில் முள்வேலி போட்டிருக்கிறார்கள். ஒருபுறம் உயரமான வரப்பு. அந்தத் தோட்டத்திற்கு வெளியே, சுற்றிலும் புல் நிறைந்த தரிசு. அந்தத் தரிசு நிலத்தில் மாடுகள் மேய்கின்றன பார்! அந்த மாடுகள் முள்வேலி அருகிலும் மேய்கின்றன. வேலியில்லாத உயர்ந்த வரப்புப் பக்கமும் மேய்கின்றன. அதோ பார், வெவ்வேறு இடத்தில் இரண்டு பேர் உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள். ஒருவன் மாட்டுக்காரன். மற்றொருவன் தோட்டத்துக்குச் சொந்தக்காரன்; — காவற்காரன். மாட்டுக்காரனின் கவனமெல்லாம் மாடுகள் தோட்டத்துக்குள் வந்துவிடக்கூடாது என்பதில். அதோ, கேட்கின்றதா உனக்கு, தோட்டக்காரன் அடிக்கடி குரல் கொடுப்பது? மாடுகள் வேலியை வந்து முறிக்க முனையும் போதோ, உயர்ந்த வரப்புப் பக்கமிருந்தது தோட்டத்துக்குள் குதிக்க முயலும் போதோ தோட்டக்காரன் கூச்சல் கிளப்புகிறான். அவன் கூச்சல் கிளப்புவதைப் பார்த்துவிட்டு மாட்டுக்காரன் மாடுகளை அதட்டுகிறான். மாடுகள் அப்பால் விலகிப்போய் மேய்கின்றன. இதே இடத்தில் தோட்டக்காரன் இல்லாவிட்டால் மாடுகள் வேலிகளை முறிக்கத்தான் செய்யும்! உள்ளே குதிக்கத்தான் போகும்! அவை முறித்த பிறகு, உள்ளே குதித்த பிறகுதான் மாட்டுக்காரன் பார்ப்பான். மாடுகளை அப்பால் துரத்துவான்—அதுவும் மாட்டுக்காரன் நல்லவனாயிருந்தால். தோட்டத்துக்குக் காவலிருப்பவன் ஒரு பொறுப்பில்லாதவன் என்று வைத்துக்கொள்வோம். மாடுகள் வேலியை முறித்தால் என்ன, தோட்டத்துக்குள் குதித்தால் என்ன, பயிர்களை அழித்தால் என்ன என்ற போக்கில் அமர்ந்திருப்பவன் என்று வைத்துக் கொள்வோம். அப்போது அவன் மாடுகள் வேலியை முறிக்கப் போனால் பார்த்துக்கொண்டிருப்பான். உள்ளே குதித்தாலும் பார்த்துக்கொண்டிருப்பான். பயிரை அழித்தாலும். அவனுக்கு அது வேதனையாகத் தெரியாது. வேடிக்கையாகவே தென்படும். அதே சமயம் மாட்டுக்காரனும் நல்ல மனம் இல்லாதவனாக இருந்தால் என்ன நேரும்? அவன் என்ன நினைப்பான்? "தோட்டக்காரனே அக்கறையில்லாமலிருக்கும்போது நாம் ஏன் மாடுகளை அப்பால் துரத்தவேண்டும்? மேயட்டுமே மாடுகள் நன்றாக!" என்றுதானே எண்ணுவான்.

"இன்று நம் மக்கள் சொந்த நாட்டிலும் வாழ வழியில்லாமல் தவிக்கிறார்கள். பட்டினி கிடந்து உயிர் விடுகிறார்கள். வேற்று நாட்டிற்போய் உழைத்துக் கொண்டிருப்போரும் பலவகையில் இன்னலும் துன்பமும் அடைகிறார்கள். அவமதிக்கப்படுகிறார்கள்! நம் மொழி இந்த நாட்டில் எல்லா வகையிலும் நசுக்கப்பட்டுக் கொண்டு வருகிறது; அவமதிக்கப்பட்டுக்கொண்டு வருகிறது."

"என்ன அப்படிச் சொல்கிறீர்கள்? ஆட்சிமுறைக்கே நம் தமிழ் மொழியைப் பலவகையிற் பயன்படுத்துகின்றார்களே!"

"எங்கே பயன்படுத்துகின்றார்கள்?"

"ஆட்சி அலுவல்களிற் சிலபகுதிகளையே தமிழில் நடத்துகின்றார்களே! அறிவுமொழி தமிழாகவே இருக்கவேண்டும் என்பதற்காக ஒரு கலைக் கல்லூரியையே தமிழில் நடத்துகின்றார்களே!"

"இவையெல்லாம் உனக்குப் பெரிதாகத் தோன்றுகின்றன. காரணம், நீ தமிழன் என்ற நிலையை மறந்துவிட்டுப், பாரதபுத்திரர் நீ என்ற எண்ணத்தோடு எதையும் பார்க்கிறாய்!"

"அதுதானே பரந்தநோக்கு! அந்தப் பரந்த நோக்குத்தானே பெரியோர்களால் எல்லாம் போற்றப்பட்ட நோக்கு. நம் நாட்டின் அறிவுப் பெருந்தகை, அறக்கடல் திரு. வி. க. அவர்கள், இப்படிப்பட்ட நோக்கைத்தானே போற்றியிருக்கிறார்கள்."

"எந்தப் பரந்த நோக்கை? நாம் எல்லாம் பாரத புத்திரர்கள்! நமக்கெல்லாம் ஒரே ஒரு பண்பாடுதானிருக்கிறது. அதுதான் பாரதப் பண்பாடு. அந்தப் பண்பாட்டின் அடிப்படையில் நமக்கெல்லாம் ஒரே ஒரு மொழிதான் இருக்கமுடியும். அந்தப் பண்பாட்டின் அடிப்படையில் நாம் எல்லாம் ஒருமிக்க நின்று ஒரே ஒரு மொழியைத்தான் போற்றவேண்டும். அந்த மொழி இந்த நாட்டின் எல்லா மொழிகளுக்கும் மூலமாகவுள்ள வடமொழியை அடிப்படையாகக்கொண்ட இந்திமொழி என்று சொல்லியிருக்கிறார்கள்? அதுதான் பரந்த மனப்பான்மை என்று வாதாடியிருக்கிறார்கள்?"

மாணிக்கம் யோசனையிலாழ்ந்தான். திரும்பவும் நான் பேசினேன்.

"உலகம் ஒரு குலம். நாட்டுநலனினும் உலக நலனே சிறந்தது; மேம்பாடுடையது என்று தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் கூறியிருக்கிறார்கள். அப்படி அவர்கள் கூறியிக்கிறார்கள் என்றால் தமிழகமெங்கணும் இந்தி மொழி ஆட்சி புரியவேண்டும் என்ற நோக்கத்திலா கூறியிருக்கின்றார்கள்? அல்லது தமிழருக்குப் புறம்பான ஏதோ ஒன்றை நாமெல்லாம் பாரதப் பண்பாடு என்று சொல்லிக்கொண்டு, தலையிலேதூக்கிவைத்துக்கொண்டு கூத்தாட வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள்? நாம் எல்லாம் தமிழர் — திராவிடர் என்பதை மறந்து, நம் பண்பாடு தனிப்பண்பாடு, நம் பழக்கமெல்லாம் தனித்தன்மை பெற்றவை என்பனவற்றையெல்லாம் மறந்து, நாம் பாரத புத்திரர் என்று தோள்கொட்டவா சொன்னார்கள்? மாணிக்கம், உன்போன்ற தமிழ்ப்பற்று மிக்கவர்கள் எல்லாம்கூட ஒருபுறம் தமிழ் வாழ்வு, தமிழன் வாழ்வு, தமிழக வாழ்வு, தமிழின் பெருமை என்று பேசிக்கொண்டு, பிறிதொருபுறம் நாம் எல்லாம் பாரதபுத்திரர்கள் என்று மாற்றானுக்கு ஊக்கம் கொடுத்துக்கொண்டுவரும் வரை, நம் மொழியை நம்மால் காக்கவே முடியாது. நம் மொழி மாற்றானால் அவமதிக்கப்படுவதை நம்மால் தடுக்கவே முடியாது. நீ சொல்கிறாய் அரசு அலுவலில் எல்லாம் தமிழ் இடம் பெற்றுவிட்டது என்று. எவ்வெவ்விடத்தில் இடம்பெற்றுள்ளது தமிழ்? அஞ்சல்துறை அரசு அலுவல் இல்லையா? இருப்புவழிப் போக்குவரத்துத்துறை அரசு அலுவல் இல்லையா? அதுபோகட்டும். நம்மீது இரண்டு ஆட்சிகள் ஆதிக்கம்புரிகின்றன என்பதை நீ மறந்துவிட்டாயா? ஒன்று மனு எழுதிக் கொடுக்கும் ஆட்சி. மற்றொன்று ஏகாதிபத்திய முறையிலமைந்த அடக்கி ஒடுக்கும் ஆட்சி. மனு எழுதிக் கொடுப்பதை வேண்டுமானால் தமிழில் எழுதிக்கொடுக்கலாம் என்று சொல்வதிற் பெருமை என்ன இருக்கிறது? இன்று அரசிதழே இந்தியில் வெளியிடப்படுகிறது. அதேபோல் தமிழிலும் அரசிதழ் வெளியிட முன்வருவார்களா? இந்திய நிர்வாக அலுவல் என்னும் உயரிய அரசு அலுவலுக்கான

ஐ. ஏ. எஸ். தேர்வு இந்தியில் எழுதுவதற்கு அனுமதிக்க முன்வருகிறார்கள். அந்தத் தேர்வைத் தமிழிலும் எழுத அனுமதிப்பார்களா? இத்தனைக்கும் இவை இரண்டும் தருவதற்கு அரிதான சலுகைகள் அல்ல. இந்தியா ஒரு நாடு என்ற அவர்களின் அடிப்படைமீதே தருதற்து இயல்வனதாம். இவை சாமானியச் சலுகைகள்; குறைந்தபட்ச சலுகைகள். அவையெல்லாம் ஒரு புறமிருக்கட்டும். மத்திய ஆதிக்க அரசின — அலுவல்களில் ஈடுபட்டிருக்கும் 40 வயதுக்குட்பட்ட அலுவலாளர்களான நம்மவர் எல்லாம், ஊழியர்களான நம்மவர் எல்லாம் இந்தியைக் கட்டாயம் படித்துத்தான் தீரவேண்டுமென்று வீதி கொண்டுவந்து விட்டார்களே! இதனினும் வேறு பெரிய ஊறுவேண்டுமா நமக்கு? இவ்வளவையும் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, அதுவும் உன்னைப்போன்ற அறிவுக் கூர்மையுள்ளவர்கள் ஒருபுறம் வாழ்க தமிழ் என்று கூறிக்கொண்டு, பிறிதொரு புறம் 'நான் பாரத புத்திரன். இந்த நாடு பாரத நாடு' என்று சொல்வதற்கு வெட்கமாயில்லையா மாணிக்கம்?

"மாணிக்கம், நம் மொழியும், நம் நாட்டுப் பண்பாடும், நம் பெருமையும் மாற்றானால் அவமதிக்கப்படாமல் இருக்கவேண்டுமானால், அலைக்கழிக்கப்படாமல் இருக்கவேண்டுமானால், நம் நாடு உரிமை வாழ்வு பெறவேண்டும் மாணிக்கம். நம் அடிமைத் தளை முறியவேண்டும் மாணிக்கம். எந்தையர் நாடு என்னும் இந்தச் செழுமைமிக்க தோட்டம் வடவர் எனும் மாடுகளால் சீரழிக்கப்படாமல் இருக்கவேண்டுமானால், உள்ளே புகுந்து அழித்துக்கொண்டிருக்கும் மாடுகளைவெளியே துரத்தி ஓட்டும் ஆற்றல் பெற்ற வல்லவர்களின் குரல், நல்லவர்களின் குரல் ஓங்கவேண்டும் மாணிக்கம். அவர்களின் நற்செய்கைகள் எல்லாம் வெற்றிபெறவேண்டும் மாணிக்கம். 'மாடுகள் மேய்ந்தால் என்ன! அவைகள்தாம் எம் எசமானர்கள்' என்று தன்னலத்துக்காகப் பேச்சு செயல்புரிந்து திரியும் கபோதிக் கூட்டம் செல்வாக்கிழக்க வேண்டும் மாணிக்கம்.

"உரிமை வாழ்வு வேண்டுமென்று கேட்டு நிற்கும் நம்மைப் பார்த்து 'அறுவை மருத்துவம் புரிவோம்' என்று தரங்கெட்டவர்கள் எல்லாம் தான்தோன்றிப் பேச்சுக்கள் பேசுகின்றார்கள். இப்படிப்பட்ட செய்தியை வைத்துக்கொண்டேபிழைப்பு நடத்தித் தீரவேண்டிய ஏடுகள், அந்த அறுவை மருத்துவம் என்பது பற்றி எப்படி எப்படியெல்லாமோ எழுதுகின்றன. எப்படி எல்லாமோ படம் போடுகின்றன. மக்களைத் திசை திருப்பிக் குழப்பத்தில் ஆழ்த்தவேண்டுமென்பதுதான் அந்த அறுவை மருத்துவப் பேச்சாளர்களின் நோக்கம். எதை எப்படி மாற்றினாலும், நிலைமைகளை உள்ளது உள்ளபடி புரிந்துகொள்ளும், தெரிந்து தெளிந்துகொள்ளும் தன்மைபெற்ற மக்கள் இந்நாட்டில் பெருகிக்கொண்டுவரும் நிலைதான் உள்ளது. அருகும் நிலை இல்லை என்பதைச் சொந்தப் புத்தியில்லாதவர்களால் உணரமுடியாதுதான். அறுவை மருத்துவம் என்று பேசுவதன் மூலம் நம்மை—விடுதலை வீரர்களை — அழிப்போம், ஒழிப்போம், வெட்டி வீழ்த்துவோம் என்றுதான் அவர்கள் அச்சுறுத்துகின்றார்கள். அந்த அச்சுறுத்தலுக்கெல்லாம் அஞ்சுவதாயிருந்தால் என்போன்றவர்களிடம் விடுதலை உணர்வு ஏற்படுமா என்ன? சாவையும், மற்ற மற்ற மிகப் பெருந்துன்பங்களையும் திரணமாக மதிப்போர்தாம் விடுதலையார்வம் கொள்ளமுடியும், உரிமை வாழ்வை உணரமுடியும் என்பது வரலாற்று உண்மை. என்போன்றவர்கள் அந்த உண்மையை மறந்தவர்களில்லை மாணிக்கம்.

"விடுதலை வேண்டுமென்று கிளர்ந்து நின்ற, துணிந்து நின்ற வீரர்களை எதிரிகள் அழித்தொழித்தார்கள்! அதன் பிறகு அங்கே விடுதலை ஆர்வமே கிடையாது. அது மங்கி மாய்ந்து மறைந்துவிட்டது என்று எந்த நாட்டு வரலாறும் பேசவில்லை மாணிக்கம்.

"பிரெஞ்சு நாட்டில்,"

"நாடு நல்லது பெறவேண்டும், ஆட்சியில் நீதி குலவவேண்டும். நியாயம் நிலவவேண்டும் என்று கூறிய நல்லவர்களையெல்லாம், வீரர்களையெல்லாம் கில்லட்டின் என்ற பயங்கரக் கொலைக்கருவிக்கு முன்னே கொண்டுபோய் நிறுத்தினான் உன்மத்தம்பிடித்த அந்தநாட்டு மன்னன், ஆளுகையை வெறியாக எண்ணி அரசுக்கட்டிலில்ஏறியவன். ஆயிரக்கணக்கான நல்லவர்களின் தலை, குற்றமற்றவர்களின் தலை அந்த 'கில்லட்டி'னால் சீவியெறியப்பட்டது. அதோடு செய்தி முடிந்துவிட்டதா? ஆணவ ஆட்சி நிலைத்துவிட்டதா? இல்லை மாணிக்கம். அந்தப் பேரழிவுக்குப் பின்னர்தான் மக்கள் உண்மையை உணர்ந்துகொண்டார்கள். எந்தக் 'கில்லட்டி'னைப் பயன்படுத்தி ஆயிரக்கணக்கான குற்றமற்றவர்களின், நல்லவர்களின், வீரர்களின் தலைகள் சீவி வீழ்த்தப்பட்டனவோ, அந்தக் கில்லட்டின் என்ற பேரச்சம் நிறைந்த கொலைக் கருவிக்கெதிரே ஒருநாள் அந்தப் பெருங்கொலைகளுக்கெல்லாம் காரணமாயிருந்த மன்னனே நிறுத்தப்பட்டான் அல்லவா மாணிக்கம்! அந்த மன்னவன் என்ற கொடியவனின் தலை அந்தக் கில்லட்டினுக்கே இரையாயிற்று, இல்லையா மாணிக்கம்? இங்கே அறுவை மருத்துவம் என்று பேசுகின்றவர்கள் அந்த உண்மைகளையெல்லாம் உணருதற்குத் தகுதிபடைத்தவர்கள் இல்லை. அவர்களை ஏற்றிப் போற்றுவதன் மூலம் வாழ்வு நடத்துகின்றவர்களும் அறியார்; அல்லது—ஒருகால் அறிந்திருப்பின் இக்கால் மறந்திருப்பார் அந்த உண்மையை.

"அல்ஜீரியாவைப் பற்றி நீயே பல தடவை எழுதியிருப்பாய் மாணிக்கம். அந்த நாட்டு மக்கள் நாகரிகத்தில் வேண்டுமானால் குறைந்தவர்களாக இருக்கலாம். ஆனால், உரிமை வேட்கையில், விடுதலை எழுச்சியில் எவ்வளவு உயர்ந்தவர்கள் என்பதை நீயே அறிவாய்! 90 இலட்சம் மக்கள் தொகையைக் கொண்டதுதான் அல்ஜீரிய நாடு அந்த நாட்டவர்—நீண்ட நாளிலிருந்தே விடுதலை முரசு கொட்டிக்கொண்டிருந்தார்கள். எனினும் கடந்த ஏழரையாண்டு காலமாகத்தான் அவர்கள் விடுதலைக்காகப் பெரும்போர், தொடர்ந்த போர், மிகமிகத் துணிச்சலான போர் நடத்தினர். அந்த மாபெரும் விடுதலைப் போராட்டத்தைக் 'கிடைத்தால் எங்கள் நாடு எமக்கே உரிமை நிலமாகக் கிடைக்கட்டும்; தளை முறியட்டும்; விடுதலை மலரட்டும! இன்றேல், அல்ஜீரியக் குலமே இல்லாமல் ஒழியட்டும' என்ற வெஞ்சினத்தோடுதான் நடத்தினார்கள் அவர்கள்! அதற்காக — உரிமை வாழ்வுக்காக அவர்கள் கொடுத்த விலை — அளித்த களபலி பெரிது பெரிது; மிகமிகப் பெரிது! பிரெஞ்சு ஏகாதிபத்தியம்என்னும் பெருவெறி, பத்து இலட்சம் அல்ஜீரியரின் உயிரைக் குடித்த பிறகுதான் கண்ணைத் திறந்து பார்த்தது. ஆமாம் மாணிக்கம்! அடக்கி ஒடுக்கி அர

சாள நினைத்த ஏகாதிபத்தியந்தான் 10 இலட்சம் உயிர்களைப் பலி கொண்ட பிறகு வெறி நீங்கக் கண்டது; தெளிவு பெற்றது; கீழே இறங்கி வந்தது. ஆனால், அந்த விடுதலை விரும்பிகள் எதற்கும் சளைக்கவில்லை; மலைக்கவில்லை மாணிக்கம்! விட்டுக்கொடுக்க வில்லை; இறங்கி வரவுமில்லை மாணிக்கம்! விடுதலையைத் தவிர வேறு எதையும் அவர்கள் பெரிதாக நினைக்கவில்லை; மதிக்கவில்லை மாணிக்கம்!

"ஐயோ, அந்த அல்ஜீரியர் எனப்பட்டோர் — பிரெஞ்சு நாட்டிலேயே, பாரிஸ் நகரத்திலேயே வாழ்ந்து வந்தோர் தங்கள் நாட்டு விடுதலைக்காகப் பட்ட துன்பந்தான் கொஞ்சமா!

40 நாட்களுக்கு முன்புகூட, நாகரிகத்தின் சிறப்பிடமான பாரிஸ் நகரம், விடுதலை உணர்வின் பிறப்பிடமான பாரிஸ் நகரம்—அது இப்போது ஒரு ஏகாதிபத்தியத்தின் தலைநகரமாகஇருந்த காரணத்தால் பகைமையும், விலங்குத் தன்மையும், போரும், சித்திரவதையும், வேறுபல அநியாய அட்டூழியங்களும் நிலவுமிடமாகக் கொந்தளித்துக் கிடந்ததே! அங்கு நடந்தவற்றை நீயும் அறிந்திருப்பாய். நானும் சொல்கிறேன் சிலவற்றை! கேள்:

முகம்மத் படாச்சே என்பவன் ஒரு 26 வயது இளைஞன். அல்ஜீரியன்—அவன் இப்போது உயிரோடு இருக்கமாட்டான் — அவன் காவல் துறையினரிடம் எந்த வன்புதுன்புக்கும் போனது கிடையாது ஆனால்,

சென்ற அக்டோபர் 15-ம் நாள். நள்ளிரவு வெளியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த தன் மிதிவண்டியைப் பூட்டிவிட்டுப்போவதற்கு வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்தான் அவன். வெளியில் அவன் இறங்கினானோ இல்லையோ, திடீரென்று காவல் ஊர்தியொன்று அவன் எதிரில் வந்து நின்றது. ஊர்தியில் காவல் துறையினர் இருவர் இருந்தனர். 'ஏறு ஊர்தியில்' என்றான் ஊர்தியோட்டி. படாச்சே விலங்கு மாட்டப்பட்டான் இழுத்துச் செல்லப்பட்டான். ஊர்தி ஒரு காட்டை நோக்கி ஓடியது. படாச்சே அங்கு இறக்கப்பட்டான். அந்தப் பிரஞ்சுக் காவலரில் ஒருவன் 'என் சகோதரன் அல்ஜீரியாவில் கொல்லப்பட்டான். அந்தக் கொலைக்கு நீ இங்கே விலையாகப் போகிறாய்' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே மற்றொரு காவலன் படாச்சேயின் கழுத்தைச் சுற்றிப் பின்புறமிருந்து கயிற்றால் இறுக்கினான்.

அந்தக் கொடியவர்களிடமிருந்து விடுபடப் படாச்சே பெருமளவிற் போராடினான். பாட்டையிலும், பாட்டையோரமிருந்த பள்ளத்திலும், மேட்டிலுமாக மூவரும் உருண்டனர்; புரண்டனர். திடீரென்று படாச்சே தலைகுப்புறத் தரையில் விழுந்தான் மற்ற இருவரும் தங்கள் வலுவையெல்லாம் ஒருங்கு திரட்டிக் கொண்டு, படாச்சேயின் கழுத்தை இறுக்கிக்கொண்டிருந்த கயிற்றை வெகு வேகமாகப் பின்னால் இழுத்தார்கள். படாச்சே நினைவு தப்பி விட்டான். எனினும் ஊசலாடிக் கொண்டிருக்கும் தன் உயிரை, கழுத்துக்கும், கயிற்றுக்கும் இடையில் இரண்டு விரல்களைக் கொடுத்துக் காத்துக்கொண்டான்.

அப்போதைக்கு அவன் உயிர் பறி போகவில்லை.

திரும்பவும் நினைவுபெற்ற படாச்சே குருதி குருதியாகக் கக்கினான். அவனுடைய கைக் கெடிகாரம், சில காகிதங்கள், அவன் வைத்திருந்த பணம் ஆக எல்லாம் சூறையாடப் பட்டிருந்தன.

பின்னர் அவனைப் பரிசோதித்த டாக்டர் கிக்கோர்ட் என்ற மருத்துவரும், பாரிஸ் நகரப் பேருந்து ஓட்டி ஒருவரும், அலுவலிலிருந்து அவன் ஒவ்வொரு நாளும் பாரிசுக்குத் திரும்பி வரும் வழியில்—சுரங்க வழி நிலையத்துச் சீட்டுப் பரிசோதகரும், எல்லாவற்றிற்கும் மேலாக அவன் பிரஞ்சுக் காவல் துறையினரால் கடத்திச் செல்லப்படுவதை நேருக்கு நேர் கண்ட மற்றொருவரும் ஆக இத்தனை பேரும் கொடியோர்களால் அவன் அடைந்த துன்பத்துக்குச் சான்றுகூறச் சித்தமாயிருந்தனர்.

சட்டபூர்வமாக நீதிமன்றத்தில் படாச்சே வழக்குத் தொடுப்பதற்கு எல்லாச் சான்றுகளும் இருந்தன. படாச்சேயும், அவனுடைய வழக்கறிஞரான எம். லீடர் மான் என்பவரும் Palais de Justice எனப்படும் பாரிஸ் நீதிமன்றத்தைப் பல முறை அணுகிக்கொண்டிருந்தனர்.

அந்தச் சமயம் திடீரென்று படாச்சே காணாமற்போனான்......

பாரிஸ் நகரத்தில் நூற்றுக்கணக்கான அல்ஜீரியர்கள், காவல் துறையினர் எனப் பெயர் சுமந்து காக்கியுடையணிந்த கொள்ளைக் கூட்டமாக, கயவாளிக் கூட்டமாகச் செயல்புரிந்தோர்களால் அடக்கி ஒடுக்கப்பட்டு அட்டூழியத்திற்காளானார்கள். என்றாலும் அவ்வளவையும் அந்த மக்கள் ஊமை விலங்குகளாகி, வெளியிட அச்சமிகக் கொண்டோராகிப் பொறுத்தவாறுதான் இருந்தனர்.

அட்டூழியம் கட்டுமீறிப் போன பிறகு அந்த அல்ஜீரிய மக்கள் தங்கள் இன்னலை உலகுக்கு எடுத்துச் சொல்ல ஊர்வலமாக ஒருநாள் கிளம்பினர். அந்த ஊர்வலத்தில் முப்பத்தையாயிரம் பேர் கலந்து கொண்டனர். அவர்கள் பாரிசின் மிக முக்கியமான தெருக்கள் வழியே சென்றனர்.

அவர்கள் இன்னலை இகந்து நிற்கும் சிரிப்போடு, கையிலே மதலைகளோடு ஊர்வலம் வந்தனர்.

ஆனால், காவல் துறையின் கண்ணை அந்த ஊர்வலம் உறுத்திற்று. அமைதி குலைக்க விரும்பிற்று காவல்துறை, ஆமாம் அமைதி காக்கவேண்டிய காவல் துறை.

சரியாக 9-40 மணி அக்டோபர் 17 கடந்த ஆண்டு.

அமைதியாகச் சென்றுகொண்டிருந்த அல்ஜீரிய ஊர்வலத்தைப் பிரஞ்சுப் போலீஸ் ஊர்திகள் தாண்டிக்கொண்டு சென்றன. தெரு முனைகளில் எல்லாம் போலீஸ் ஊர்திகள் நிறுத்தப்பட்டன. எங்கெங்கும் போலீஸ் வீரர்கள் இறைந்து நின்றனர். அவர்கள் கரங்களில் எல்லாம் சிறு துப்பாக்கிகள், இயந்திரத் துப்பாக்கிகள். சுடத் தொடங்கினார்கள். சுட்டார்கள் அவர்கள்! பேனாக்கத்தி முதற்கொண்டு எந்த ஆயுதமும் கைவசம் இல்லாமல் அமைதியாகச் சென்றுகொண்டிருந்த அல்ஜீரியர்கள் மீது சுட்டார்கள் அவர்கள்! ஊர்வலம் கலைந்தது. அச்சத்தால் அலைக்கழிக்கப்பட்ட மக்கள் — அல்ஜீரியர் — நாற்புறமும் சுலைதெறிக்க ஓடினர். ஒருவரையொருவர் தள்ளிக்கொண்டோடினர். கீழே வீழ்ந்து பிணமாகக்கிடப்போரை மிதித்துக்கொண்டு ஓடினர். குருதி வெள்ளத்தைத் தாண்டிக்கொண்டு ஓடினர். குய்யோ முறையோவெனக் கூக்குரலிட்டுக் கொண்டு ஓடினர். இது பாரிஸ் நகரத்தின் ஒரேஒரு இடத்தில் மட்டும்

நிகழ்ந்த ஒரேஒரு நிகழ்ச்சியல்ல. அந்த நகர் முழுவதும் இப்படிப் பல நிகழ்ச்சிகள். உள்நாட்டுப் போரே நிகழ்வது போன்றதொரு காட்சி.

சுடுதலும், பிரஞ்சு வெறியர்களின் இரக்கமற்ற அடுதலும் ஓய்ந்த பிறகு பாட்டை எங்கணும் ஒரே அவலக் கோலம்! பேரவலக் கோலம்! குழந்தைகளின் தள்ளு வண்டிகள் எங்கெங்கும் கவிழ்ந்து கிடந்தன. பெண்களின் மிதியடிகள், வேறு ஆடைகள், அணிகள் எங்கெங்கும் இறைந்து கிடந்தன. பார்க்குமிடம் எல்லாம் குருதி! சிந்தி வழிந்த குருதி!

தலைதெறிக்க நாற்புறமும் சிதறி ஓடிய அல்ஜீரியர்களைப் பிரஞ்சு வெறியர்கள் — ஆமாம், காவல் துறையினர்—சும்மா விட்டார்களா? இல்லை, இல்லை! கண்ணிற்பட்ட அல்ஜீரியரையெல்லாம் பிடித்துவந்து வரிசையாக நிறுத்தினார்கள். கைகளிரண்டையும் அவர்கள் தலைமீது வைத்துக் கொள்ள வேண்டுமென்று பணித்தார்கள். அவர்களுக்குப் பின்புறமாக நின்றுகொண்டு அந்தப் போலீஸ் வெறியர்கள் அடித்தார்கள்; கையோய்ந்து போகுமட்டும் அடித்தார்கள். உதைத்தார்கள்; காலோய்ந்து போகுமட்டும் உதைத்துக்கொண்டேயிருந்தார்கள். இந்தக் கோர அடாவடிச் செயலும் ஒரே இடத்தில் மட்டுமா! பாரீஸ் நகரில் பல இடங்களில்.

அன்று மாலை முழுதும் பிரஞ்சு அரசின் மருத்துவமனை வண்டிகள் வெளியே தலைநீட்டவேயில்லை. காயமடைந்த அல்ஜீரியர் எவருக்கும் மருந்து உதவி கிட்டவேயில்லை. கடைசியில் எப்.எல்.என். இயக்கத்தார் வந்தனர்—இறந்துபோனவரின் சடலங்களை எடுத்துச் செல்ல.

பிரெஞ்சு நாட்டின் தலைசிறந்த எழுத்தாளர் பலர் இந்தப் பேரவலங்கள் முழுதையும் விசாரித்தறிய விரும்பினர். ஒவ்வொரு அல்சீரியர் வீட்டுக்கும் போயினர்; பார்த்தனர். ஐயோ, ஒவ்வொரு வீட்டிலும் ஒரு புதிய பேரவலக் கதை காத்திருந்தது. அவர்கள் கூறுவதையும் கேள்.

ஓரிடத்தில் ஒரே ஒரு அல்ஜீரியன் தன்னந்தனியனாக எட்டுப்பேரடங்கிய, வெறிபிடித்த பிரெஞ்சுப் போலீஸ் படையொன்றிடம் சிக்கிக் கொண்டுவிட்டான். ஐயோ, அந்த அல்ஜீரியனை அந்த வெறியர் உதைபந்தை எத்தி எத்தித் தொலைதூரம் எறிவதுபோல் உதைத்து, உதைத்தே, எத்தி எத்தியே கொன்று தீர்த்தனர்.

ஒரு காவல் நிலையத்துக்குள் 300 அல்ஜீரியர்கள் சிறிய அறையொன்றுக்குள் அடைத்துப்போடப்பட்டார்கள். பிறகு இரப்பர்க்குழாய்மூலம் அந்தச் சிறிய அறைக்குள் தண்ணீர் பாய்ச்சப்பட்டது. அவ்வளவு பேரும் நீரில் ஊறிக்கொண்டுகிடந்தார்கள். இரவு முழுதும் அப்படியே கிடந்தரர்கள்.

நடுத்தர வயதுள்ள அல்ஜீரிய அன்னையொருத்தி கூறுகின்றசோக நிகழ்ச்சியையும் கேள்.

“காவலர்கள் சிலர் திடீரென்று என் வீட்டுக்கு வந்தனர். ஒருவன் கையை மடக்கிக்கொண்டு பல முறை என் முகத்தில் ஓங்கி ஓங்கிக் குத்தினான். கீழேதள்ளினான். இரண்டு கால்களாலும் மாறிமாறி உதைத்தான். கையிலிருந்த குறுந்தடியைக்கொண்டு பல முறை வலுவாகததாக்கினான்.

பிறகு என்னையும், என் மகளையும் கைதுசெய்தனர். காவல்நிலையத்திற்குக்கொண்டு சென்றனர். அங்கே என் கண்முன்னால் என் அருமை மகளை எல்லாருமாகச் சேர்ந்துகொண்டு திரும்பத்திரும்ப வயிற்றில் உதைத்தனர்.

இரவில் என்னைமட்டும் விடுதலை செய்தனர். நான் மறுபடியும் காவல் நிலையம் சென்றேன் என் கண்மணியை அழைத்துவர. அப்போது அங்கிருந்த காவற்சேவகர் அனைவரும் ஒருமிக்கச் சேர்ந்துகொண்டு குறுந்தடியால் என்னைத் தாக்க முற்பட்டனர்; தாக்கினர்.

அதன் பிறகு என் செல்வியைப்பற்றிய செய்தியே கிடைக்கவில்லை.”

மறுநாட் காலை சிறைபிடிக்கப்பட்ட அல்ஜீரியர்களில் ஐயாயிரம் பேர் பாடிவீடு ஒன்றில் அடைத்து வைக்கப்பட்டனர். அங்கே செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், மத குருக்கள் யாரும் அனுமதிக்கப்படவில்லை. அதுமட்டுமா! அடைத்துப் போடப்பட்ட அந்தக் கைதிகளுக்கு உணவு தரப்படவில்லை. நீர் கொடுக்கப்படவில்லை. வேறு எவ்வகைக் கவனமும் அவர்கள்பால் செலுத்தப்படவில்லை. கடைசியாக அவர்களைக் கண்காணிக்கும் வேலை இராணுவ ஊழியர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த ஊழியர்களில் ஒருவனே கூறுகின்ற அவல வரலாற்றைக் கேள்.

“நாங்கள் அந்தப் பாடி வீட்டில் வந்திறங்கினோம். எளிய உணவு ஒன்றைத் தயாரிக்க முனைந்தோம். உடனே படைத் தலைவர் என்னை அழைத்தார். ‘கைதிகள் கொண்டுவரப் படுகின்றனர். அவர்களைப் பாத்து வா’ என்று பணித்தார்.

சிறு பொழுதில் ஊர்தியொன்று படைக்கலச் சாலைக்குள் வந்து நுழைந்தது. மூன்று பெண்கள் முதலில் இறங்கினர். பிறகு ஆண்கள் வந்தனர். அவர்கள் கைகளிரண்டையும் மேலே உயர்த்தித் தலைமீது வைத்துக்கொண்டு வந்தனர். ஒருவர்பின் ஒருவராக வந்தனர்.

உடனே அட்டூழியம் தொடங்கிற்று. முதலில் நின்ற காவல் ஊழியன் ஒவ்வொருவர் தலையிலும் தொடர்ச்சியாக அறையத் தொடங்கினான். அடுத்தடுத்து நின்ற ஒவ்வொரு காவல் ஊழியனும் தாக்குவதைத் தொடர்ந்து வரிசையாகச் செய்துகொண்டே நின்றான். அந்த வெறியர்களின் தொடர்ந்த தாக்குதலைத் தாங்க மாட்டாத கைதிகள் சிலர் கீழே சிமிண்டுத் தரையில் தடுமாறி வீழ்ந்தனர்;—வலுவாக வீழ்ந்தனர்.

அப்படி வீழ்ந்தோரின் மீது கால்களின் உதையும், துப்பாக்கிக் கட்டைகளின் அடியும் மாறி மாறி விழுந்தன. வீழ்ந்தவர்கள் தள்ளாடத்தோடு மறுபடியும் எழுந்தனர்; நடந்தனர்.

ஏறத்தாழ 60 அடி தொலைவுக்கு அந்தக் கைதிகள் நடந்த வழியில் இந்தக் கோரத் தாக்குதல் நிகழ்ந்தது—ஊர்தி காலியாகும் வரை.

திரும்பச் சென்றேன் நான் — உணவு சமைத்து எல்லாருக்கும் பரிமாற. அந்தச் சூழல்,—மூச்சு முட்டி நினைவிழக்கச் செய்யும் அளவில் ஆயிரக்கணக்கான அல்ஜீரியர்கள் ஆடுமாடுகளென அடைத்து வைக்கப்பட்டிருந்த சூழல் நிலையிறந்த கொடுமைச் சூழல். அப்பப்ப! புழுக்கம் நிறைந்த நெருக்கம். அந்த நெருக்கம் பரப்பியதோ பொறுக்க முடியாத நெடி நாற்றம்.

பதிவு எண். எம். 4642 | தொலைபேசி எண்.... அலுவலகம் 15, இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

அந்தக் கைதிகள் உணவைக் கூடப் பெரிதாகக் கேட்கவில்லை; நினைக்கவில்லை. தண்ணீர், தண்ணீர் என்று அவர்கள் ஓயாது ஒழியாது கதறிக் கதறிக் கேட்டுக் கொண்டிருந்தனர். 24 மணி நேரத்துக்குமேலாக அவர்கள் தண்ணீரைக் காணவே யில்லை யாம்! காவல் துறையினரின் இந்த அடாத செயல்களுக்கு நாங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கத்தான் செய்தோம்! ஆனால், எங்கள் எதிர்ப்பு அவர்களுக்குப் பெரிதாகத் தென்படவில்லை. நேர்மையின்மை யெனும் வெறுமையை நோக்கி விடுதத எதிர்ப்புகளாகவே நரங்கள் காட்டிய எதிர்ப்பு அங்கே பயனற்றுத் திரும்பி வந்தது. எந்தத் தாக்குதலுக்கும் அசையாத பெரிய சுவர் ஒன்றின் மீது மோதிய மோதுதல்போல் எங்கள் எதிர்ப்பு விடையற்றுப் போயிற்று.

ஒரு பிரஞ்சு இராணுவ ஊழியர் இவ்வளவும் சொல்கிறார். இதற்கு இது வரை எந்தப் போலீஸ் ஊழியரும் மறுப்புக் கூறவில்லை.

அட்டூழியம் இவ்வளவுதானா! ஐயோ, இன்னும் எவ்வளவோ! பாரிஸ் நகரத்தல் ஓடுகின்ற சீன் நதியில் மிதந்த அல்ஜீரியப் பிணங்கள் எத்தனை! அந்த நதியின் இரு பாங்குமுள்ள காடுகளில் கிடந்து அழுகிய, நாறிய பிணங்கள் எத்தனை எத்தனை!

அங்கும் நல்ல உள்ளம் படைத்தோர் இல்லாமலில்லை அவர்கள் இவற்றிற்கெல்லாம் சரியான நீதி விசாரணை வேண்டுமென்று கோருகின்றனர். ஆனால், கெடுமதியாளர் சிறு தொகையினராயினும் அவர்கள் கொடுங்கரம் வலுத்த கரம்! நீதி விசாரணையை அவர்கள் தள்ளிப் போட்டுக்கொண்டு, போட்டுக் கொண்டு போகின்றனர் — காலக் கடத்தலால் போதிய சான்றுகள் கிட்டாமல் மறைந்து போகட்டு மென்ற விலங்கு எண்ணத்தோடு.

இவ்வளவும் ஏன் சொல்கிறேன் தெரியுமா மாணிக்கம்! இன்னல் ஓராயிரமல்ல, ஆயிரமாயிரம் வரினும் 'வேண்டுமடி எந்நாளும் விடுதலையம்மே' என்று விடுதலை முரசு கொட்டத் தொடங்கியவர்கள் அந்த விடுதலையைத் தவிர மற்றெல்லாவற்றையும் கெடுதலை உடையதாகவே எண்ணுவர். அந்த விடுதலை விரும்பிகள் இலட்சங்களுக்காகப் பல்லிளித்து நிற்கமாட்டார்கள். பிறகு வெற்றுத் தேசியம் பேசமாட்டார்கள். கடைசியில் அவர்கள் தலையில் அவர்களே மண்ணை வாரிப் போட்டுக்கொள்ளமாட்டார்கள். திக்குக் கொருவராய் ஓடமாட்டார்கள். எங்கே போய் ஒண்டலாம் என்று திகைக்கமாட்டார்கள். அல்லது மாநில சுயாட்சி என்று வீண் கலாசாரம் பேசி விதரணையற்றவர்களின் சிரிப்புக்காளாக மாட்டார்கள். நல்ல உள்ளங்களைப் புண்படுத்த மாட்டார்கள். இவற்றையெல்லாம் நீ தெரிந்து, தெளிந்துகொள்ள வேண்டுமென்று தான் கூறுகிறேன். அதோடுகூட,

மக்களாட்சிப் பண்புக்குக் கால்கோல் நடத்திய பாரிஸ் நகரமே, நாகரிகத்தின் பிறப்பிடமான, சிறப்பிடமான பாரிஸ் நகரமே, ஆணவம் பிடித்த முடியரசுக்குச் சாவுமணியடித்த பாரிஸ் நகரமே ஏகாதிபத்தியம் என்ற நிலைக்கு வந்ததும் எவ்வளவு தொலைவு கீழ்மைக்கு வந்துவிட்டது, எவ்வளவு அநியாய ஆடாவடிக்கெல்லாம் காரணமாகிவிட்டது என்பனவற்றையெல்லாம் நீ உணர்ந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவுந்தான் சொல்கிறேன் மாணிக்கம். பின்னும் பார்! அந்த நாகரிகமே அப்படி வெறியாட்டம் ஆடிற்றென்றால், இன்னும் ஆடுகிறதென்றால்,

நாளை,

இந்தத் திருவிடத்து விடுதலை வேட்கை உச்ச நிலையை வந்தடையுங் காலை நாகரிகம் தெரியாத இன்றைய டெல்லி ஏகாதிபத்தியம் இந்த நாட்டு விடுதலை விரும்பிகளை எப்படியெல்லாம் தொல்லைப்படுத்துமோ, துன்பப்படுத்துமோ என்பதையும் உய்த்துணர்ந்துகொள்ளவேண்டும்; எவ்வளவு கொடிய பேரிழப்புக்கும் சித்தமாக இருக்கவேண்டும் என்பதற்காகவுந்தான் சொல்கிறேன் மாணிக்கம்!

திருவிடத்தின் விடுதலை விரும்பிகள்—அறம் பிறழாதவர்கள்; வன்முறையில் நம்பிக்கை இல்லாதவர்கள், உண்மையான காந்தியவாதிகள். எனினும் இந்த விடுதலை வீரர்கள் நடத்தப்போகும் அறப்போராட்டத்தில் எதிர்பாராத இன்னல் எல்லாம் வந்து விளையும் என்பதை நன்றாக உணர்ந்துகொண்டே — எதிர்பார்த்தே — இருக்கவேண்டும் என்பதற்காகவுந்தான் சொல்கிறேன் மாணிக்கம்.

நிழல் மறைந்தது. வெயில் சரிந்து கொண்டு வந்தது. மாணிக்கம் எழுந்தான். புது மனிதனாகிவிட்டவனபோல் மிடுக்குடன் எழுந்தான் நானும் எழுந்தேன்.

★

'அறப்போர்' அடுத்த இதழ்!

மேதின மலராக 20 பக்கங்களில் சிறப்போடு வெளிவரும்.

"தில்லியில் நாங்கள்"

நாஞ்சில் கி. மனோகரன் எம்.ஏ., எம்.பி.,

அவர்கள் எழுதும் தொடர் கட்டுரை ஆரம்பம்.

அறப்போர்,

9-A, டாக்டர் சி.பி. இராமசாமி ரோடு, அபிராமபுரம், சென்னை-18.

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.